சென்னை வியாபாரி

என்கிற

தென்னிந்தியா வர்த்தக ஜர்னல்

புஸ்தகம் 1.
Vol. 1.

ஆனந்தவருஷ சித்திரைமீ—1914ளு ஏப்ரல்மீ

ஸஞ்சிகை 12.
No. 12.

Usury and Debt.

கடன்படுவதும் கடுமையான வட்டியும்:

———:———

இங்கிலாண்டு தேசத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வரும் லாவாதேவிச் சட்டத்தை அனுசரித்து இந்தியா முழுமைக்கும் ஒரு லாவா தேவிச் சட்டம் பிறப்பிக்க வேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் சிந்தனை செய்து கொண்டு வருகிறார்கள் என்று மதிராஸ் டைம்ஸ் பத்திரிகையின் நிருபர் மேற்படி பத்திரிகைக்கு ஸிம்லாவிலிருந்து தந்தி அடித்திருக்கிறார். அவசியத்தை முன்னிட்டு கடன் வாங்குகிறவர்கள் மார்வாரிகளிடம் சிக்கிக்கொண்டால் பிறகு அவர்கள் தப்பிப்பிழைப்பது அரிதாயிருக்கிறது! ஈவும், இறக்கம், தயவு தாக்ஷண்யமில்லாமல் வட்டி மேல்வட்டி போட்டு கடனாளியை கழுகுபோல் குத்தி உயிருடன் பிடுங்கித் தின்று போடுகிறார்கள்! இந்த விஷயத்தில் பெரும்பாலும் கோர்ட்டார் பிரவேசித்துயாதொரு நன்மையும் செய்யக்கூடியதாயில்லை! ஏன் என்றால் ஒப்பந்தச் சட்டப்படி என்ன வட்டி சேர்த்து முதலை கடனாளி செலுத்துவதாகவும் கடன்காரன் வாங்கிக்கொள்ளுவதாகவும் ஒப்பந்தம்செய்து கொண்டார்களோ அந்தவிகிதப்படி தீர்ப்பு செய்ய கோர்ட்டார் சட்டத்தால் கட்டுப்பட்டவர்களாகப் போய்விட்டார்கள். மார்வாரி என்கிற சாவுகார்களிடம் லாவாதேவி செய்யும் அனேக உத்தியோகஸ்தர்கள் கடனிலிருந்து நீங்கி சுகம்பெறுவது சூன்யமாயிருப்பதை நாம் கண்கூடாய்ப் பார்க்கிறோம்! நம் நாட்டில் அதிலும் சென்னை ராஜதானியின் தென்பாகங்களில் ஐக்கிய முயற்சி சங்கங்கள் ஏற்பட்டு கிராமந்தரங்களிலிருந்த சவுக்கார்களை விரட்டிவிட்டன. பட்டணவாசங்களில் இந்த சாவுகார்களுடைய கொடூர வட்டியும் கொடுமையும் சகிக்க முடியாமலிருக்கிறபடியால் கவர்ன்மெண்டாருடைய உத்தேசத்திலிருக்கும் பிரஸ்தாப சட்டத்தை வருந்தி அழைக்கின்றோம். இச்சட்டத்தைப் பிறப்பிக்க கவர்ன்மெண்டார் இன்னும் தாமதிக்க மாட்டார்கள் என்று உறுதியாய் நம்புகின்றோம்; இந்தச் சட்டம் பிறக்கு முந்தி இன்னொரு சட்டமும் பிறக்க வேண்டும், அதாவது கடனை தீர்க்க வகைபற்ற கடனாளியை ஜெயிலில் பிடித்து அடைத்து வைக்கக் கூடாதென்று ஒரு சட்டம் பிறக்க வேண்டும். கடனைத் தீர்க்க வகையற்றிருப்பது கிரிமினல் குற்றமாக மாட்டாது! ஜெயிலில் பிடித்து வைக்கிறவன் கடன்காரனே ஒழிய சர்க்காரல்ல; ஏன் என்றால் கடன்காரன் கட்டின ஜெயில் படி முடிந்துபோனவுடன் கடனாளி ஜெயிலைவிட்டு விரட்டப்படுகிறான். அதா

வது கடனாளியை ஜெயிலில் கடன்காரன் பிடித்து வைப்பது வஞ்சமே ஒழிய மற்றப்படி வேறில்லை. மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தியாருடைய டில்லி பட்டாபிஷேக சமயத்திலேயே இந்த அநாகரீக பழைய வழக்கத்தை கவர்ன்மெண்டார் ரத்து செய்து விடுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. கடனாளியை ஜெயிலில் பிடித்து வைக்கக் கூடாதென்று சட்டம் பிறந்தால் வெண்ணலைக் கடன்களும் முகதலைக்கை மாதத்துக் கடன்களும் குன்றிப்போகுமென்பதில் சந்தேகமில்லை. அப்படிக் குன்றிப்போவது தேசத்திற்கு நன்மையைப் பயக்குமென்பதில் ஐயமேயில்லை. ஏன் என்றால் ஒரு மனிதனுக்கு கடன் வாங்க சக்தியில்லை என்று ஏற்பட்டால் அவன் தன்னிடமுள்ள கொஞ்ச நெஞ்ச கையிருப்பைச் செட்டாகச் செலவு செய்வான்; தன்னுடைய க்ஷேமத்திற்குத் தன்னையே நம்ப கட்டாயப்படுத்தப் பட்டவனாகயிருக்கிறான். ஆகையால் இந்த துர் வழக்கத்தை ஒழிக்கும் ஒரு சட்டமும் பிறப்பிக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டாரை வேண்டிக் கொள்ளுகின்றோம்.

Cotton seed.

பருத்திக் கொட்டை.

இந்தியாவில் பருத்திக் கொட்டையை இங்கிலாண்டு ஐரோப்பாவிலுள்ளவர்கள் வருடத்திற்கு வருடம் எதேஷ்டமாக வாங்கிவருவதும் இந்த தேசங்களின் ஜனங்கள் இவைகளுக்கு நல்ல விலை கொடுத்து வாங்கிவருவதும் மைசூர் சமஸ்தானத்தாருடைய கவனத்தைப்பற்றியிருக்கிறது. ஐரோப்பாவிலும் இங்கிலாண்டிலும் இந்தியப் பருத்திக் கொட்டையைக் கொண்டு எண்ணெயும் புண்ணாக்கும் செய்கிறார்கள். இந்த இரண்டு வஸ்துக்களும் மனிதர்களுக்கும் பிராணிகளுக்கும் மிக உபயோகப்படக் கூடியவை. ஆதலால் மைசூரில் பயிராகும் பருத்திக் கொட்டையை வெளியில் அனுப்பும்படி விடாமல் மைசூர் சமஸ்தானத்தில் தேவஞ்ஞரில் ஒரு ஆலை ஸ்தாபிக்க உத்தேசஞ் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆலை 125 குதிரை பலமுடையதாயிருக்கும் வருஷம் ஒன்றுக்கு 7500 டன் கொட்டைகள் நசுக்கும்; தினம் 80 ஆட்களுக்கு வேலை கொடுக்கும்; 75 ஆயிரம் எக்ராவில் பயிரான பஞ்சு தேவஞ்சரில் உடைக்கப்பட்டு வருமென்றும் (625) டன் கொட்டை தேறுமென்றும் எஸ்டிமேட் போடப்பட்டிருக்கிறது. இந்த ஆலை ஸ்தாபிப்பதைப் பற்றி கைத்தொழில் வியாபார கமிட்டியின் செக்ரேட்டரியாகிய மிஸ்டர் வி, ரெகுநாத ராவ் சாகேப் அவர்கள் விளம்பரம் பிரகரித்திருக்கிறார்கள்.

Retirement of Mr. Wynch.

மிஸ்டர் வின்ச் உத்தியோகத்தை விட்டு நீங்கினது.

சென்னை ரெவினியூ போர்ட்டு செக்ரேட்டரியாக விருந்த மிஸ்டர் வின்ச் உத்தியோகத்தைவிட்டு பென்ஷன் பெற்றுக்கொண்டார்; சிலகாலம் வரையில் லார்டு ஆம்த்திலுக்கும் சிலகாலம் சர். ஆர்தர் லாலிக்கும் பிரைவேட் செக்ரெட்டரியாக விருந்து பிறகு திருநெல்வேலி ஜில்லா கலெக்டராக நியமனமடைந்தார். இவர் காலத்தில் தான் வி. ஓ. சிதம்பர பிள்ளை சம்பந்தப்பட்ட சுதேசிய கலகம் நடந்தது.

Imports and Exports for February 1914.

1914 பிப்ரவரி மாசம் இறக்குமதி எற்றுமதி.

1914-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் இறக்குமதி 1913-ம் வருடம் பிப்ரவரி மாதத்தில் செய்யப்பட்ட இறக்குமதியை விட ரூபா 19,82,481-க்கு அதிகப்படியாய் சென்னையில் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. இவ்வளவு அதிகப்படியான தொகையில் ரூ. 17,77,804 சீமை ஜவுளியைச் சேர்ந்தது. இந்த பிப்ரவரி மாதத்தில் மட்டிலும் சீமை ஜவுளி ரூ. 30,34,944 க்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. சென்ற வருட முடிவில் சென்னை சீமை ஜவுளி வர்த்தகர்களிடம் கையிருப்பு எதேஷ்டமாகயிருந்ததை முன்னிட்டு புதிய சரக்கு தருவிக்க இன்டெண்டு கொடுக்க சக்தியற்றவர்களாக விருந்ததை யோசித்துப்பார்க்கின் கடந்தபிப்ரவரிமாதத்தில் இவ்வளவு பெரிய தொகைக்கு சரக்கு வாங்க சக்தி உண்டாயிருப்பது சந்தோஷமாயிருக்கிறது. மற்ற முக்கிய இறக்குமதிகளாவன:—நூல் ரூ. 5,61,695; நிலக்கரி ரூ. 2,55,561, மருந்துகள் ரூ. 1,70,782; பொன் வெள்ளி ரூ. 3,54,993, தானியமும் பருப்பும் ரூ. 1,96,718 பீங்கான் சாமான்கள் ரூ. 2,86,072 உலோகங்கள் ரூ. 10,92,744 ரயில் சாமான்கள் ரூ. 7,93,032, தேக்கு ரூ. 1,17,163. வாசனை சாமான்களைத் தவிற சென்னப்பட்டணம் துறைமுகத்தில் கடந்த பிப்ரவரி மாசத்தில் ரூ. 1,01,42,822 பொருமானமுள்ள சரக்குகள் இறக்குமதி செய்யபட்டிருக்கின்றன. ஆனால் 1913 பிப்ரவரி மாசத்திலோ ரூ. 81,60,341 க்கு தான் இறக்குமதி செய்யப்பட்டது.

இதே மாதத்தில் எற்றுமதி ரூ. 65,32,037 க்கு செய்யப்பட்டிருக்கிறது. முக்கியமான எற்றுமதிகளின் விபரம்: தோல் ரூ. 29,33,730 விதை ரூ. 15,45,881, ஆக எற்றுமதியும் இறக்குமதியுமாகச் சேர்ந்து ரூ. 1,67,71,542 க்கு செய்யப்பட்டிருக்கின்றன.

Exports from Subordinate Ports.

மற்ற துறைமுகங்களிலிருந்து செய்யப்பட்ட எற்றுமதிகள்.

கடந்த பிப்ரவரி மாதத்தில் சென்னை ராஜதானியில் மற்ற துறைமுகங்களிலிருந்து சென்னைக்கு ரூ. 1,79,24,374 பொருமானமுள்ள சரக்கு எற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றது. முக்கியமான சரக்குகளின் தொகை.

காபி	ரூ. 40,14,094
கொப்பரை	19,96,558
கயிறு	8,84,754
தானியமும்பருப்பும்	17,54,904
மிளகு	12,14,670
மணிலாக்கொட்டை	39,77,371
தேயிலை	10,52,953

Southern India Chamber of Commerce.

தென்னிந்தியா வர்த்தக ஆலோசனை சபை.

நம்முடைய தென்னிந்திய வர்த்தக ஆலோசனை சபையின் வருடாந்திரக் கூட்டம் சென்ற மார்ச்சு மீ 30ௗ நடந்தேறினது. அனேக மெம்பர்கள் விஜயஞ் செய்திருந்தார்கள். புதிய வருடத்திற்கு புதிய நிர்வாக ஆபிசர்கள் தெறிந்தெடுத்து நியமிக்கப்பட்டார்கள். ராவ் பகதூர் P. தியாகராய செட்டியார் அவர்கள் மறுபடியும் இவ்வருடத்திற்குப்பிரசிடெண்டாகவும் மெசர்ஸ் மவுலானா அப்தஸ் சுப்ஹான் சாகேப்பும் மிஸ்டர் V. அருணகிரி நாயுடு B. A. யும் கௌரவ காரியதரிசிகளாக நியமிக்

கப்பட்டார்கள். அடியிற் கண்டவர்கள் கமிட்டி மெம்பர்களாக நியமிக்கப்பட்டார்கள்:-மெசர்ஸ், P. N. முத்துசாமிநாயுடு B. A. வித்தியாசாகர் பாண்டியா, C. T. ஆள்வார் செட்டியார், B. சிட்டிபாபு நாயுடு, T. நம்பெருமாள் செட்டி, C. ராமானுஜம் செட்டி, N. ராஜகோபாலன், P. அய்யன்ன செட்டி, C. கோபாலமேனன், T. சிதாராம செட்டிகாரு, W. வேணுகோபால நாயுடு, கான்பகதூர் வால்ஜி பால்ஜி சேட், முகமத் மூசாசேட், யாக்கூப் உசேன் சேட், ஹாஜி முகமத் ஹானிப்சாகேப், ஹாஜி முகமத் அப்தல் அஜிஸ் சாகேப், C. சீனிவாசாச் சாரியார், திவான் பகதூர் K. கிருஷ்ணசாமிராவ், S. V. ராமசாமி முதலியார், D. V. ஹனுமந்த ராவ், ஜமால் முகமத் சாகேப் மீர் அப்தர்ரகிமான் சகேப்.

இம்மீட்டிங்கில் சென்ற வருடத்திய ரிப்போர்ட் வாசிக்கப்பட்டது. சென்ற வருடத்தில், வாணச்சரக்கு இறக்குமதி செய்பவர்கள் அவர்கள் சரக்கை இரக்கி ஸ்டோர் செய்து வைக்கும்படியாக போர்ட்டிரஸ்ட்டுக்கு சொந்தமான விடத்தில்விடம் கொடுக்கவேண்டுமென்று நம்சேம்பர்வாதாடி அவர்களுக்குஅந்தக்காரியத்திற்காக பிரத்தியேகமாகஒரு கட்டடம் கட்டிக் கொடுக்கும்படி தூண்டியிருக்கிறது. ஆதலால் வாணச்சரக்கு இறக்கிமதி செய்கிறவர்களுக்கிருந்த குறைநீங்கிப் போயிருக்கு மென்று எண்ணுகின்றோம். இந்த மீட்டிங்கிற்குச் சேர்மெனாக விருந்த ராவ்பகதூர் P. தியாகாரய செட்டியரர் அவர்கள் இந்த ராஜதானியின் வியாபாரம் கைத்தொழிலைப்பற்றி எடுத்துப் பேசிசென்ற வருடத்தில் சீமை ஜவுளிகளில் காரிகாகங்களும், சலவைரகங்களும் வர்ணரகங்களும், பின்னல் மிஷீன்களும், மோட்டார் வண்டிகளும் ஏதேஷ்டமாக இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றனதென்றும், சர்க்கரை அளவுக்குமிஞ்சி இறக்குமதி செய்யப்பட்டு கையிருப்பு அதிகமாய் போய் விட்டதென்றும் அதன் காரணமாக கடந்த 11 மாதங்களுக்குள் எத்தனை மூட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கவேண்டுமோ அவ்வளவு இறக்குமதி செய்யப்படாமல் 25 ஆயிர மூட்டைகள் சம்மியாய் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன என்றும் பஞ்சின் ஏற்றுமதியும் தோலின் ஏற்றுமதியும் சென்ற வருடம் குறைந்து போயிருந்த போதிலும் மணிலாக் கொட்டையும் கொப்பரையும் 60 லக்ஷ ரூபாய்க்குமேல் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறதென்றும் ஆனால் ஆமணக்கு ஏற்றுமதியில ரூபாய் 10 லக்ஷம் குறைந்துபோயிருக்கிறதென்றும் சொன்னர். லோகல் கவர்ன்மெண்டில் கைததொழிற்களை கவனித்து விருத்தி செய்யும்படி ஒரு டிபார்ட்மெண்டு ஏற்பட்டிருக்கிற படியால் இனி நம் ராஜதானியில் இப்போதிருக்கும் கைத்தொழிற்களை அது அபிவிருத்தி செய்துவருவதுடன் புதியகைத் தொழிற் ஸ்தாபணங்களும் அது ஏற்படுத்தக் கூடுமென்று சொன்னர்.

ஆகவே நம்முடைய சேம்பர் தென்னிந்தியாவிலிருக்கும் வர்த்தவகுப்பாருடைய குறைகளை கவனித்து அவைகளை அப்போதைக்கப்போது நீக்கி அவர்களுடைய நன்மைக்காக ஒரே மனதாய் அல்லும் பகலும் உழைத்து வருவதை பார்க்க நமக்கு சந்தோஷமாக விருக்கிறது! சேம்பர் தன்னுடைய சொந்த உபயோகத்திற்காக வாங்கியிருக்கும் புதிய கட்டடத்தின்கிரையத்தொகையை உளவடைப்பதற்காக சேம்பர் பிறப்பித்திருக்கும் டிபன்சர் பத்திரங்களை அனேக மெம்பர்கள் ஆவலுடன் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்ற இச்சமயம் எடுத்தெழுத நாம் மறந்து போகக்கூடாது.

A Warning to Postmasters.

போஸ்ட் மாஸ்டர்களுக்கு ஒரு எச்சரிக்கை.

வெளியூர்களிலும் கிராமங்களிலுமிருக்கும் போஸ்ட் மாஸ்டர்கள் அடிக்கடி மோசக்காரர்களால் ஏமாற்றப் படுகிறார்கள். சமீபத்தில் சிராம்பூரிலிருக்கும் ஒரு பிராமண போஸ்ட் மாஸ்டர் 370 ரூபாய் பெறுமானமுள்ள கவர்ன்மெண்டு கரன்சி நோட்டுகளை இழந்து ஏமார்ந்து போயிருக்கிறார். கல்கத்தா கம்பட்டு ரோலர் ஆபீசில் ஏதோ சில நோட்டுகள் காணமற்போய்விட்டதென்றும் அந்த ஆபீசில் உத்தியோகஞ் செய்யும் சிராம்பூரைச் சேர்ந்தவன் பேரில் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறதென்றும், அவன் இந்த நோட்டுகளை இந்த (சிராம்பூர்) போஸ்டாபிசில் மாற்றியிருக்கிறானோ என்று தன்னை சோதனை செய்யும்படியாக அனுப்பியிருக்கிறார்கள் என்று ஒரு ஐரோப்பியனோ அல்லது பரங்கிக்காரனோ சிராம்பூர் போஸ்ட் மாஸ்ட்டரிடம் அறிவிக்க, அவர் அவனை இன்ஸ்பெக்டர் என்று மதித்து ஆபீசைச் சோதனை செய்யும்படிவிட, அந்த ஆபீசில் அந்த சமயமிருந்த நோட்டுகளையும் ரொக்கத்தையும் எட்கிளார்க்கின் மேஜையின் பேரில் எட்கிளார்க்கிற்கு எதிரில் வேஷக்கார இன்ஸ்பெக்ட்டர் சோதனை செய்தான்.

இந்த சமயத்தில் தந்தியந்திரம் தந்தி அடிக்க, மேற்படி எட்கிளார்க் அந்த யந்திரத்தினிடம்போக அந்த சமயத்தில் வேஷக்கார இன்ஸ்பெக்டர் 37 பத்துரூபாய் நோட்டுகளை எடுத்து தன்னுடைய ஜோப்பில் ரகசியமாய்ப் போட்டுக்கொண்டு மற்றப் பணத்தையும் சில நோட்டுகளையும் ஒரு பையில் போட்டு சீல் செய்து பத்திரமாய் வைத்திருக்கும்படியாகவும் மறுநாள் போலீஸார்களுடன் தான் வருவதாயும் சொல்லி மேற்படி பையை போஸ்ட் மாஸ்டரிடம் கொடுத்துவிட்டுப் போனான். போனவன் திரும்பி வரவில்லை. போஸ்ட்மாஸ்டருக்குச் சந்தேகமுண்டாகி அவருடைய மேல் அதிகாரியின் முன்னில் பையை உடைத்துப் பார்க்க 37 பத்து ரூபாய் நோட்டுகள் களவாடப்பட்டிருக்கின்றன என்று தெரிய வந்தது. என்று ஹிந்து "பேட்டிரியட்" என்னும் பத்திரிகை கூறுகின்றது.

The College of Commerce, Bombay.

பம்பாய் வர்த்தக கலாசாலை.

பம்பாய் வர்த்தக கலாசாலை வேலை ஆரம்பித்துவிட்டது. இந்த கலாசாலையில் சேர்ந்து வாசிக்க 300 பேர்கள் மனுசெய்து கொண்டார்கள். முதல் வருடமாக விரும்பதாலும், கலாசாலைக்கென்று விஸ்தாரமான விடம ஒன்று ஏற்படும் பரிபந்தம் எல்லாரையும் சேர்த்துக் கொள்ளக் கூடாதென்று 100 பேர்கள் மட்டிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். கலாசாலையில் பயின்று தேறினவர்கள்தான் இந்த கலாசாலையில் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள். மற்ற பாடங்களுடன் வியாபாரச் சட்டமும், கணக்கு பழக்கமும் போதித்துக் கொடுக்கப்படும்.

Meteorite Stones in Malabar.

மலையாளத்தில் வான கற்கள்.

கடந்த மார்ச்சு மாதம் 30-ந் தேதி மலையாளத்தில் திடீரென்று ஒரு இடி இத்தது. கனத்த மழை பொழியுமென்று எண்ணப்பட்டது. ஆனால், இந்த இடி விஷயமாக வந்திருக்கும் ரிப்போர்ட்டால் பொன்னனி, திரூர், திருரங்காடி, குட்டிபுரம், ஒட்டபாளம் முதலிய ஊர்களில் 100 ராத்தல் நிறையுள்ள கற்கள் ஆகாயத்திலிருந்து விழுந்து உடைந்து சிதறுண்டு கிடந்தனவாம். இந்த கற்கள் பொறுக்கப்பட்டு சென்னை மியூசியத்திற்கு அனுப்பப்படுமென்று எதிர்பார்க்கப் படுகின்றன.

Modified Hill Exodus.

கோடை காலத்திற்கு கவர்ன்மெண்டு மலைக்குப் போவது

ஐக்கிய மாகாண கவர்ன்மெண்டு கோடை கால வாசத்திற்காக எல்லா உத்தியோகஸ்தர்களையும் இவ்வருடம் தங்களுடன்கூட அழைத்துக்கொண்டு போகவில்லை. ரெவினியூ, காடு, மராமத்து, வைத்தியம் சுகாதாரம்—ஆகிய இந்த இலாகாகளைச் சேர்ந்த அனேக உத்தியோகஸ்தர்களை அலகாபாத்திலேயே விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். ஆபீசர்களுடன் சர்க்கியூட் குமாஸ்தாக்கள் மட்டிலும் போயிருக்கிறார்கள்.

Post Office Profits.

தபால் ஆபீஸ் லாபம்.

அநுமார் வால் வளர்ந்தது போல இந்தியா தேச தபால் ஆபீசுகளின் அசல் லாபம் வருடத்திற்கு வருடம் வளர்ந்து கொண்டு போகிறது. 1910–11-ல் 46-ஆயிரம் பவுன் அசல் லாபம் தேறி யிருக்கிறது. 1912-13-ல் 5-மடங்கு அதிகமாக வந்திருக்கிறது. 1913-14-ல் 2,91,600 பவுன் வந்திருக்கிறது. 1914-15-க்கு 4,70,600-பவுன் தேறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வளவும் லாபம் வந்தும் தபாலாபீசுகளில் வேலை செய்யும் கீழ்தர உத்தியோகஸ்தர்களின் நிலைமை உயரவில்லையே என்று "டிரிபுயூன்" என்கிற பத்திரிகை கூறுகின்றது.

New Route to Ceylon.

சிலோனுக்குப் புதிய வழி.

சிலோனுக்குத் தபால் பழையவழி மூலியமாய் அனுப்புவது நலமா அல்லது புதிய வழியாக அனுப்புவது நலமா என்று வங்காளச் சேம்பர் சென்னைச் சேம்பருக்குக் கடிதம் எழுதிக் கேட்க, சென்னைச் சேம்பர் "அதற்குள் சொல்ல முடியா"தென்ற பதில் எழுதியிருக்கிறது.

Joint Stock Companies.

ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகள்.

கடந்த பிப்ரவரிமீத்தில் இந்தியாவில் மொத்தத்தில் ரூபா 412,89,970 மூலதனமுடைய கம்பெனிகள் ஸ்தாபிக்கப்படப் போகிறதாக ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது, விபரம்:— வங்காளம் ரூபா 1,53,05.000; பம்பாய் ரூபா 18,55,000, சென்னை ரூபா 99 970, பீகார் ரூபா 20,000, பஞ்சாப் ரூபா 10,000,

---

Importation of Sovereigns.

சவரன்களின் இறக்குமதி.

இந்த வருடம் இந்தியாவிற்கு எவ்வளவு சவரன்கள் அனுப்பப்பட்டன வென்று மிஸ்டர் லைகாட் ராபர்ட்சன் என்கிற பார்லிமெண்டு மெம்பர் கேட்டதற்கு 1913-14-ம் வருடத்திய முதல் மாதங்களில் 5,044.100 சவரன்கள் அனுப்பப்பட்டன வென்றும் 1913-14 அபிக்ஷிபல் வருடத்தில் 7400,000, பவுன் பெறுமான முள்ள சவரன்கள் அனுப்பப்பட்டன வென்று அண்டர் செக்ரேட்டேரி பதில் கூறினார்.

Madras High Court.

சென்னை ஐகோர்ட்.

சென்னை ஐகோர்ட்டு ஜட்ஜிகளில் ஒருவராகிய ஆனரபில் ஜஸ்டிஸ் மில்லர் துரை. மைசூர் கவர்ன்மெண்ட் சீப்கோர்ட்டில் சீப் ஜஸ்டிஸ் உத்தியோகம் பெறப்போகிறாரென்று ஒரு வதந்தி உண்டாயிருந்தது. இப்பொழுது அவர் வருகிற ஜூலை மாதம் 20௳ வேலையை ஒப்புக்

கொள்ள போகிறாரென்று நமக்கு சமாசாரம் எட்டுகிறது, அவருக்குப் பதில் ஐகோர்ட்டில் யாரை நியாயாதிபதியாக நியமிக்கப் போகிறார்களோ தெரியவில்லை. அநேகமாய், மிஸ்டர் ஸி. ஜி. ஸ். பெண்ணரே அந்த உத்தியோகத்தை பெறுவாரென்று எண்ணப்படுகிறது. ஏனெனில், முன்பு அநேக தடவைகளில் இவர் ஆக்டிங் ஜட்ஜாக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆனாலும் கவர்ன்மெண்டாருடைய நோக்கம் எப்படியோ தெரியவில்லை.

சென்னை ஹைகோர்ட்டில் வேலை கையிருப்பு அதிகமாயிருக்கிற படியால், இப்பொழுதிருக்கும் எட்டு ஜட்ஜிகள் போதாதென்று, இன்னும் இரண்டு பேர்கள் ஒரு வருடத்திற்கு டெம்பெரரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கஞ்சம் ஜில்லா, டிஸ்டிரிக்ட் அண்ட் செஷன்ஸ் ஜட்ஜாக யிருக்கிற திவான் பஹதூர் வீ. வி. குமாரஸ்வாமி சாஸ்திரியாரும், சென்னையில் பப்ளிக் ப்ராஸிகூட்டராக யிருக்கும் மிஸ்டர். வி. எப். நேப்பியரவர்களுமே.

சில தினங்களுக்கு முன், இந்திய பாரிஸ்டர்களுக்கு இது வரையிலும் ஐகோர்ட்டில் உத்தியோகம் கொடுக்கவில்லை என்று, இந்தியா கவர்ன்மெண்டாருக்கு ஒரு மனு எழுதப்பட்டிருந்தது அது என்ன கதியாயிற்றோ தெரியாது. இத்தடவை ஒன்றும் பலிக்காமல் போனபோதிலும், இனிமேலாவது ஏதாவது காலி ஏற்படும் பக்ஷத்தில் நமது இந்திய பாரிஸ்டர்களில், மிகுந்த புத்தி சாதுரியமும். பொருந்த பெற்ற ஒருவருக்காவது ஐகோர்ட் ஜட்ஜ் உத்தியோகம் கொடுத்தால் மிகவுந்திருப்தி கரமாக விருக்கும் முதலான விடங்களுக்குப் போய் சட்டப் பரிக்ஷைக்கு படிக்க ஒருவிதமான தூண்டுகோல் போலாம்.

British Navy.

பிரிடிஷ் கப்பல் படை.

1911-15௵ செலவு திட்டக் கணக்குப்படி பிரிட்ஷ் கவர்ன்மெண்டார் இரண்டு யுத்த ஸ்டீமர்கள் தயார் செய்யும்படியாக கண்டிராக்ட் கொடுக்கப் போகிறார்கள். 1916 அக்டோபர் மாதத்தில் ஸ்டீமர்கள் தயாராக யிருக்கவேண்டுமாம்.

Madras Engineering College.

சென்னை இன்ஜினீர் கலாசாலை.

இப்போது சேப்பாக்கிலிருந்து வரும் சென்னை இன்ஜினீர் கலாசாலையைப் பலப்படுத்த வேண்டுமென்றும் இன்னும் அனேக மாணாக்கர்கள் அதில் வசித்து வரும்படியாகவும் இன்னும் அதை விசேஷ உபயோகமுள்ளதாகச் செய்ய வேண்டுமென்று கவர்ன்மெண்டார் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறார்கள். கிண்டியில் இதற்காக விசாலமான ஓர் இடத்தில் புதிய கட்டடம் கட்டப்போகிறார்கள். இது விஷயத்தைப் பற்றி கவனிக்க (1) இஞ்ஜினீர் கலாசாலை பிரின்ஸிபால் (2) பராமத்து இலாக்கா சீப் இஞ்ஜினீர் (3) ஆனரபில் சர் பிரான்ஸிஸ் ஸ்பிரிங் (4) மதிராஸ் தென் மராட்டா இன்ஜினீர் மிஸ்டர் எ. பி. ஸ்டேன்ஞ் (5) கைத்தொழில் இலாக்கா டைரக்டர் மிஸ்டர் டிரஸலர்கூடிய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது.

A Famine Relief Fund.

பஞ்ச நிவாரண நிதி.

கான்பூரில் ஒரு பஞ்ச நிவாரண நிதி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு கான்பூர் கம்பள ஆலை சொந்தக்காரர்கள் ரூ. 10 ஆயிரமும்

சர் அலக்சாண்டர் மாக்ராபர்ட் ரூ. ஆயிரமும் நன்கொடை கொடுத்து உதவியிருக்கிறார்கள்.

New Industries in Mysore.
மைசூரில் புதிய கைத்தொழிற்கள்.

மைசூர் சமஸ்தானத்தில் புதிய கைத்தொழில்கள் ஸ்தாபிப்பவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க சமஸ்தானத்தார் தீர்மானித்திருக்கிறார்கள். இதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் விதிகளின் பிரகாரம் மைசூர் கைத்தொழிற் வியாபார கமிட்டி செக்ரேட்டேரியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

The Hon'ble Sir Fazulbhoy Currimbhoy.
ஆனரபில் சர் பாசல்பாய் கரிம்பாய்.

பம்பாயில் சிரேஷ்ட வியாபாரியாக விருக்கும் சர் பாசல்பாய் கரிமபாய் அவர்களுக்கு கவர்ன்மெண்டார் "நயிட்" என்கிற கௌரவப்பட்டம் அளித்து அவர்களை நன்கு மதித்திருப்பதாகவும் அவர்கள் முகமதிய வகுப்பாருக்குச் செய்திருக்கும் நன்மைகளுக்காகவும் அவர்கள் பால் நன்றி பாராட்டவும் கௌரவப்படுத்தவும் பம்பாய் ஜனங்கள் கடந்த மாதம் 31-ந் தேதி டவுன் ஹாலில் மீட்டிங்கு கூடி ஒரு உன்னதமான கொண்டாட்டம் நடத்தினார்கள்.

Madura Technical Institute.
மதுரை கைத்தொழில் சாலை:

மதுரை கைத்தொழிற் சாலையில் இஞ்ஜினீர் படிப்பும் போதிக்கப் படும்படியாக கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் மதுரையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கைத்தொழிற் சாலை போல ஒரு சாலை காக்கி நாட்டில் ஸ்தாபிக்கப்படும்படி கவர்ன்மெண்டார் உத்திரவு செய்திருக்கிறார்கள். இது விஷயத்தை தீவிரத்தில் கவனிக்கும்படி சென்னை கைத்தொழில் டைரக்ட்டர் மிஸ்டர் டாஸ்லர் உத்திரவு செய்யப்பட்டு இருக்கிறார்.

Cashier Sentenced.
காஷ்கீப்பர் தண்டிக்கப்பட்டார்.

மெசர்ஸ் பின்னி கம்பெனியாரால் மானேஜ்மெண்டு செய்யப்பட்டு வரும் பெங்களூர் கம்பளம், பருத்தி, பட்டு ஆலைகளின் காஷ்கீப்பராக விருந்த மிஸ்டர் M. A சீனிவாசய்யங்கார் ரூ. 20,243 ஒரு தடவையும் ரூ. 10,901 மற்றொரு தடவையும் கையாடி விட்டதாக குற்ற சாட்டி பெங்களூர் செஷன் கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டு கடந்த மாதம் 23-ந் தேதி 5 வருஷம் கடினகாவல் தண்டனையும் ரூபாய் இரண்டாயிரமும் அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறார்.

Manganese
மகனீஸ்
உலோகம்.

1914-ஜனவரி மாசத்துடன் முடியும் 10 மாதங்களில் வங்காளம், பம்பாய், சென்னப்பட்டணம் ஆகிய இந்த மாகாணங்களிலிருந்து 611,182 டன மகனீஸ் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இவைகளை அடியிற்கண்ட தேசங்கள் இறக்குமதி செய்திருக்கின்றன:—யுனைட் கிங்டம், ஜெர்மனி, ஹாலாண்டு, பெல்ஜியம், பிரான்சு, இட்டாலி, ஆஸ்டிரியா ஹங்கேரி, ஜப்பான் யுனைட்டெட் ஸ்டேட்ஸ்.

Scholarship for Mathematical Research.
கணித ஆரய்ச்சிக்கு உபகாரச்சம்பளம்.

சென்னை போர்ட்டிரஸ்ட் ஆபீசில் ரூ 20 சம்பளத்தில் கிளர்க் உத்தியோகத்திலிருக்கும் மிஸ்டர் S. ராமானுஜம் என்பவர் டிரினிட்டிகாலேஜ் மாகஜபின் (Trinity College Megazine) என்கிற பத்திரிகையில் காணப்பட்ட நேரடான கணக்குகளுக்கு அதி சாமர்த்தியமாக முடிவு சொல்லி, இவருடைய புத்தி சாதுர்யத்தை அறிந்த கேம்பிரிட்ஜ் கலாசாலை புரொபசராகிய மிஸ்டர் நீவேல் என்பவர் சிலாகித்து, சென்னை கவர்ன்மெண்டாருக்கு எழுத சென்னை கவர்ன்மெண்டார் ஷை மிஸ்டர் ராமானுஜம் என்பவர் கேம்பிரிட்ஜ சர்வ கலாசாலைக்குச் சென்று கணித ஆராய்ச்சி செய்து வரும்படியாக வருஷம் ஒன்றுக்கு 250 பவுன் உபகாரச் சம்பளம் கொடுத்து உதவுவதாக வாக்களித்திருக்கிறார்கள்.

Summons Against the Directors of Bank.
பாங் டைரக்டர்களுக்கு சம்மன்.

பம்பாய் கிரடிட் பாங்க் லிக்குவிடேட்டர் செய்துகொண்ட மனுவின் பேரில ஷை பாங்கில் கையாடப்பட்டிருக்கும் ரூ. 23,23,231. யை அடியிற்கண்ட மேற்படி பாங்கின் டைரக்டர்களிடமிருந்து தனித்தனி யேனும் அல்லது சேரே யேனும் வசூல் செய்யும்படி பம்பாய் ஐகோர்ட்டார் சம்மன் அனுப்பியிருக்கிறார்கள்:— ஆனரபில் சர் பாலச்சந்திர கிருஷ்ணு, ஆனரபில் சர்தார் சையத் ஆலி எல்டெருஸ் மிஸ்டர் காஜராபுருடின், மிஸ்டர் டைபாய் மகேட்டிலாலா, மிஸ்டர் ஹிராலால் சோட்டாலால் ஷராப், மிஸ்டர் T. D. மேத்தா, டாக்டர் குலாப் உசேன் பேட்டல்.

Victoria Technical Institute.
விட்டோரியா டேக்னிக்கல் கைத்தொழிற்சாலை.

கடந்த மார்ச்சு மாசம் 17-ந் தேதி நடந்த விக்டோரியா கைத்தொழிற் சாலையின் வருடாந்திரக் கூட்டத்தில், தென்னிந்தியாவில் தயார் செய்யப்படும் சாமான்கள் ஐரோப்பா தேசங்களிலும் செலவழியும்படியாக, இச் சாமான்கள் அத்தேசங்களுக்குக் கொண்டுபோகும்படியாக, ஒரு பிரயாணி நியமிக்கப்பட வேண்டுமென்றும் மிஸ்டர் W. R. ஹண்டர் பிரேபனை செய்தார், இபற்கைப் பொருட்கள் எப்படியிருக்கின்றனவோ அவைகள்போல வேலை செய்யப் படும்படியாக தென்னிந்திய தொழிலாளிகள் போதிக்கப்பட வேண்டுமென்று அதற்காக ஒரு ஓவர்சியர் நியமிகப்பட வேண்டுமென்றும் ஆனரபில டி, வி. சேஷகிரி அய்யா பிரரேபனை செய்தனர், அக்கிராசேனம் வகித்துக்கொண்டிருந்த ஆனரபில் சர் எச். ஸ்டுவர்ட் தென்னிந்திய பொருட்களைக் கொண்டு லண்டனில ஒரு பொருட்காக்ஷி நடதத வேண்டுமென்று சொன்னர்,

Improvement in Telegraphy.

தந்திஅடிப்பதில் விருத்தி.

அமெரிக்கா தேசத்தில் ஒரு தந்தி கம்பெனியார், மனிதர்களைக்காட்டிலும் மிக வேகமாக தந்தி அடிக்கக்கூடிய யந்திரங்களைக் கண்டுபிடித்து அதற்குத் தகுந்த தந்தி மார்க்கங்களைப் போட்டுவருகிறார்கள். இந்தக் கம்பெனி தந்தி ஆபீசுகளில் போஸ்ட் கார்டுகள் போல டெலிக்கார்டுகள் என்று சொல்லும்படியான கார்டுகள் விற்றுவரப்படுகின்றனவாம். இவைகளில் எழுதப்படவேண்டிய விஷயங்களை டைப்பில் அடித்து இவர்களுடைய தந்தி ஆபீஸின் மேல்விலாசத்திற்கு அனுப்பிவிட்டால், அந்த தந்தி ஆபீசுக்காரர்கள் அக்கார்டில் எழுதப்பட்டுள்ள விஷயங்களை விரும்பப்பட்ட ஊருக்குத் தந்தி அடித்துவிடுகிறார்கள். அந்த ஊரில் உள்ள தந்தி ஆபீசுக்காரர்கள் அந்த தந்தி சமாச்சாரங்களைப் பெற்று முன்போல டயிப் செய்து மேல்விலாசத்தையும் எழுதி தபாலில் போட்டுவிடுகிறார்களாம், இதனால் தபால் மூலியமாக ஒருநாள் செல்லக்கூடிய ஒரு தபால் கார்ட்டு, டெலிகார்டு மூலியமாக இரண்டு அல்லது மூன்று மணி நேரத்தில் போய்ச் சேர்ந்துவிடுமாம். இதன்றி இங்கிலீஷ் அரிச்சுவடியிலுள்ள எழுத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் சில சின்னங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சின்னங்களடங்கிய டயிப்ரயிட்டர் மிஷினைப்போல ஒரு மிஷின் (Machine) கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. வர்த்தமானப் பத்திரிகைகளிலுள்ள நீண்ட சமாசாரங்களை தந்தி அடிப்பதற்கு இந்த சின்னங்களைத் தெரிந்துகொண்டு அந்த சின்னங்கள் பிரகாரம் டயிப் அடித்து அந்த மிஷனிடம் கொடுத்து விட்டால், அதே பிரகாரம் தந்தி அடித்துப் போடுகிறது. அந்த தந்தியைப் பெற்று பழையபடி சாதாரண பாஷையில் எழுதி பத்திரிகையில் பிரசுரிக்கலாம். சார்ஜ் சாதாரண தந்தியைவிட குறைவாயிருக்கிறதாம். இந்த புதிய கம்பெனியார் அமெரிக்கா தேசத்திலுள்ள யுனைடெட் ஸ்டேடிவ் சில ஊர்களில் தங்களுடைய தந்தி ஆபீசுகளையும் மார்க்கங்களையும் ஸ்தாபித்துக்கொண்டு வருகிறார்களாம். இந்த தந்தி மெஷின் (Teletape) டெலிடேப் என்று சொல்லப்பட்டு வருகிறது. இதில் இருக்கும் இன்னுமொரு ஆச்சரியம் என்னவென்றால் இந்த டெலிடேப் என்கிற யந்திரம் தந்தி அடித்துக்கொண் டிருக்கும்போதே இந்த மெஷினுக்காக ஏற்பட்ட தந்திக் கம்பி மூலியமாக டெலிபோனும் பேசலாமாம். பைசக்கில் மோட்டார் வண்டி, கிராமபோன் முதலிய நூதனங்களைப்போல் இந்த புதிய தந்தியும் நம் தேசத்தை கூடிய சீக்கிரம் எட்டிப் பார்க்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

இங்கிலாந்தில தபால் இலாக்காவிலும் தந்தி இலாக்காவிலும் சமாசாரங்கள் இப்போதைவிட இன்னும் மிகந் துரிதமாக எட்டுவதற்கு பல பிரயத்தனங்கள் நிமிஷத்திற்கு நிமிஷம் செய்யப்பட்டு வருகின்றன. பிரபலமான வர்த்தகர்களுக்கு தந்திகள் வந்தால் அவைகளை தந்தி ஆபீசுக்காரர்கள் அந்த நிமிஷமே மத்திய டெலிபோன் ஆபீசுக்கு டெலிபோனில் சொல்லிவிடுகிறார்கள். இந்த டெலிபோன் ஆபீசுக்காரர்கள் அச்சமாசாரங்களை டெலிபோனில் சொல்லிப் போடுகிறார்கள்.

THE MADRAS LEGISLATIVE COUNCIL.

சென்னை சட்ட நிருபண சபை.

நிகழ் ஏப்பிரல் மாதம் 2-ந் தேதி போர்ட் செண்ட் ஜியார்ஜ் கோட்டைக்குள் ளிருக்கும் கவுன்சில் சேம்பர் மாளிகையில் சென்னை சட்ட நிருபண சபை மீட்டிங்கு ஒன்று நடந்தேறி னது. அடியிற்கண்ட மெம்பர்கள் விஜயஞ் செ ய்திருந்தார்கள்:—ஆனரபில் மெசர்ஸ் W. பிரா ன்சிஸ், P. S. சிவசுவாமி அய்யர், S. B. மர்ரே T.N. ஸ்டோன், B V. நரசிம்மய்யர், A.S. கிரு ஷ்ணராவ் பந்துலு, M. B. நரசிம்மேஸ்வா சர் மா, C. T. கார்மைக்கல், A மியூர்ஹெட், E. F. பார்பர், V. குன்கிராமன் நாயனர், K. சிதம் பரநாத முதலியார், A. T. G. M. அகமத் தம் பர மரக்காயர், V. ராமபத்ர நாயுடு, தொட் டப்ப நாயக்கனர், ஜெமீன்தார், K. R. V. கிரு ஷ்ணராவ் பந்துலு, C. V. S. நரசிம்மராஜு, V. S. சீனிவாச சாஸ்திரி, R. M. சர்வேஜ், T. ரிச்மெண்ட், X. ருமப்பநார், P. கேசவப்பிள்ளை N. S. பிராடி, C. R. M. ஸ்மிட், H. F. W. ஜில்மான், L. E. பக்லி, R. C C. கார், A. பட் டர் வொர்த், W. O. ஹாரன், சர்ஜான் அட்க் கின்சன், அட்வோகேட் ஜெனரல், கர்னல் W. M. எல்லிஸ்சர், பிரான்சிஸ் ஸ்பிரில், கான் பகதூர் ஹாஜி இஸ்மேல் சேயிட் பகதூர், சர் H. பிரேசர், டாக்டர் T. M. நாயர், A. சுப்ப ராயலு ரெட்டியார், கூபா-அல்-முல்க, T. ஜெயின்-சுல்-அபிஷன் சாகேப் பகதூர், ராஜா ஸ்ரீமதனமோகன சிம்ம தேவுகாரு ரெவரெ ண்டு G. பிட்டன்டிரிக், P. C. சோமசுந்திர செட்டியார், ஆர். ராமச்சந்திர ராவ்பந்துலு V. X. ராமானுஜாச்சாரியார், சர்ஜன் ஜெனரல் W. B. பானர்மான், L. D. சுவாமிக்கண்ணுப் பிள்ளை சர். ஹாரோல்ட் ஸ்டுவர்ட்,

---

Interpellations Answered.

கேள்விகளுக்கு ஜவாப்பு சொல்லப்பட்டன,

The Hon'ble Mr. B. V. Narasimha Iyer.

ஆனரபில் மிஸடர் B. V. நரசிம்மயர்.

கே. 1. 1914 பிப்ரவரிமீ 11உ மதிராஸ் ஸ்டாண்டர்ட் பத்திரிகையில் மிஸ்டர் "சைக் சும் சம்மேரி ஜூஜியங்களும்" என்று ஒரு வியாசம் எழுதப்பட்டிருந்ததே கவர்ன் மெண்டார் அதை வாசித்துப்பார்த்தார்களோ? அதில் சொல்லப்பட்டிருக்கிற தாமதங்களும், ஒழுங்கீனங்களும் உண்மைதான என்று விசாரணை செய்ய கவர்ன்மெண்டார் இஷடப் படுவார்களா? சம்மேரி வியாஜ்ஜியங்கள் தாமத மாக விசாரணை செய்யப்படுவதால் கக்ஷிக்காரர் களுக்கு உண்டாகும் தீங்குகளை பரிகரிக்க கவர் ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஜ. 1. ஆம் பார்த்திருக்கிறார்கள். ஆனல் அது விஷயமாக யாதொரு ஏற்பாடும் செய்வது அவசியம் என்று கவர்ன்மெண்டார் நினைக்க வில்லை.

கே, 2· 7-3-1914லும் 10-3-1914லும் பிர சுரஞ் செய்யப்பட்ட இந்தியன் பேட்ரியட் பத் திரிகையில்"மிஸ்டர் சைக்ஸ்சும் சம்மேரி வியா ச்சியங்களும்'' மிஸ்டர் சைக்ஸ் நியாயாதிபதி ஸ்தானத்தில்'' என்று முறையே எழுதப்பட் டிருந்த வியாசங்களை கவர்ன் மெண்டார் கவனித்தார்களா? 12-8-1913ல் பிரசுரமான வட ஆற்காடு ஜில்லா கெஜெட்டின் அநுபந்தத் தில் மிஸ்டர் சைக்சினுடைய வேலைகளைப் பரிசீலனை செய்து பல ரிமார்க்குகள் செய்திருப் பது உண்மைதானா? அதன் பிறகு அவரு டைய வேலை பரிசீலனை செய்யப்பட்டதா? அப்

படி செய்யப்பட்டிருந்தால் அதை கவர்ன்மெண்டார் பயிரங்கப்படுத்த இஷ்டப்படுவார்களா?

ஜ: 2. ஆம். கவர்ன்மெண்டாருக்குச் சமாசாரம் தெரியாது. அது விஷயமாக யாதொரு ஏற்பாடும் செய்ய கவர்ன்மெண்டார் தயாராயில்லை.

கே. 3 10-2-1914 தேதியுள்ள ஹிந்து பத்திரிகையில் "போலீஸ் ஆட்சி" என்று எழுதப்பட்டிருந்த வியாசத்தை கவர்ன்மெண்டார் பார்த்தார்களா! சுப்பிரமணிய பாரதி இனி தன்னைப் போலிசார் உபத்திரவப்படுத்தக்கூடாதென்று மேன்மை தங்கிய கவர்னருக்கு மனு செய்து கொண்டதும் அம்மனு விசாரணை செய்யப் படுவதற்காக நீதி இலாக்காவிற்கு அனுப்பப்பட்டதும் வாஸ்தவமா? அப்படி ஏதேனும் விசாரணை நடத்தப்பட்டதோ? அப்படி விசாரணை நடத்தப்பட்டிருந்தால் அதன் முடிவு என்ன? மனுவையும் அதின்பேரில் செய்யப்பட்டிருந்த உத்திரவையும் கவர்ன்மெண்டார் பயிரங்கப்படுத்த இஷ்டப்படுவார்களா?

ஜ. 3. இந்துப்பத்திரிகையில் எழுதப்பட்டிருந்த வியாசத்தை கவர்ன்மெண்டார் பார்த்தார்கள். C. சுப்பிரமணிய பாரதியால் மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுக்கு சில மனுக்கள் அனுப்பப்பட்டன, அவைகள் சர்க்கார் முறைமையில் பைசல் செய்யப்படுவதற்காக நீதி இலாக்காவிற்கு அனுப்பப்பட்டன. யாதொரு விசாரணையும் நடத்தப்படவில்லை பிரிடிஷ் நியாயத்திற்குத் தப்பி ஓடிப்போனவன். அவன் தன்னுடைய நடத்தை விசாரணை செய்யப்பட வேண்டுமென்று விரும்பினானேயானால் அவன் பிரிடிஷ் இந்தியாவிற்குள் திரும்பிவர வேண்டும் அப்போது கோர்ட்டு விசாரணை ஆரம்பிக்கப்படும். மனுவும் அதின்பேரில் போடப்பட்ட உத்திரவும் பயிரங்கப் படுத்தப்படமாட்டா.

கே. 8. வெளியூர்களில் நீதி இலாக்காவில் உத்தியோகம்பார்க்கும் காப்பிஸ்டர்கள் ஆகார சாமான்களுடைய விலைகள் ஏறியிருப்பதால் தங்களுடைய சம்பளம் உயர்த்தப்படவேண்டுமென்று நேரேனும் அல்லது ஐக்கோர்ட்டு வழியாயேனும் மகஜர் அனுப்பியிருக்கிறார்களோ? அப்படி அனுப்பப்பட்டிருந்தால் கவர்ன்மெண்டார் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த இணங்குவார்களா?

ஜ. (8) அப்பேர்ப்பட்ட யாதொரு மகஜரும் கவர்ன்மெண்டாருக்கு வந்து சேரவில்லை. அவர்கள் இப்போது பெற்றுக்கொண்டு வரும் சம்பளம் போதுமானதாயில்லை என்கிற விஷயம் பரிசீலனை செய்யப்படும் பரியந்தம் யாதொன்றும் சொல்லமுடியாது.

கே. 11. எத்தனை காட்டு பஞ்சாயத்துகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சர்க்கார் வருஷம் முடிவதற்கு முந்தி ஒவ்வொரு ஜில்லாவிலும் இன்னும் எத்தனை பஞ்சாயத்துகள் ஏற்படுத்தப்படும்? அவைகளுக்குள் எத்தனை பஞ்சாயத்துகளுக்கு கால்நடைகளை மேய்க்க "பெர்மிட்" கொடுக்கும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்று சொல்ல கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஜ. 11. இதுவரையில் 5 பஞ்சாயத்துகள் தான் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சர்கார் வருட முடிவுக்குள் இன்னும் எத்தனை ஏற்படுத்தப்படுமென்று இப்போது சொல்லமுடியாது. இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கும் பஞ்சாயத்துக்களுக்கு மேய்ச்சலுக்கு "பெர்மிட்" கொடுக்கும்படியான அதிகாரமிருக்கிறது. இப்பேர்ப்பட்ட பஞ்சாயத்துகளுக்கு விதிகள் ஏற்படுத்தும் விஷயம் கவர்ன்மெண்டாருடைய ஆலோசனையிலிருந்து வருகின்றது.

கே. 12. சேலம், கோயமுத்தூர் ஆகிய இந்த நகரங்களிருக்கும் ஜனங்கள் கவர்ன்மெண்டு விறகு டிப்போ கண்டிராக்டர்கள் உயர்ந்த

படி இவ்வளவு விலைக்குதான் விரபனை செய்து வரவேண்டுமென்று கவர்ன்மெண்டார் விலை நிரணயிக்கவேண்டுமென்று 1912-ம் வருடம் முதல் ஜில்லா கலெக்டருக்கும், ரெவினியூ போர்டாருக்கும் கவர்ன்மெண்டாருக்கும் மகஜர் அனுப்பியிருக்கிறார்களா? அப்படி விலை நிர்ணயிக்கப்படக் கூடாதென்று கண்டிராக்ட்டர்கள் ஏதேனும் ஆக்ஷேபனை மனு கொடுத்திருக்கிறார்களோ என்று கவர்ன்மெண்டார் சொல்ல இஷ்டப்படுவார்களோ?

ஜ. 12. கவர்ன்மெண்டு விறகின் விலை நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று சேலம் ஜனங்களிடமிருந்து கவர்ன்மெண்டாருக்கு 1913 ல் ஒரு மகஜர் வந்திருக்கிறது. கோயமுத்தூரிலிருந்து யாதொரு மகஜரும் வரவில்லை. மற்றப்படி ரெவினியூ போர்டாருக்கும், ஜில்லா அதிகாரிகளுக்கும் மகஜர் அனுப்பப்பட்டிருக்கும் சமாசாரம் கவர்ன்மெண்டாருக்குத் தெரியமாட்டாது. கண்டிராக்ட்டர்கள் ஆக்ஷேபனை மனு கொடுத்திருக்கும் சமாசாரமும் கவர்ன்மெண்டாருக்குத் தெரியாது.

கே. 13. சட்டசபை மீட்டிங்குகள் இன்னும் இவ்வருடம் எத்தனை நடக்கும்? எத்தனை மசோதா ஆக்ட்டுகள் சபையின் ஆலோசனைக்குக் கொண்டு வரப்படும்? வருடத்திற்கு 6 மீட்டிங்குகளுக்குக் குறையாமலாவது நடக்கும்படி கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்வார்களா? மார்ச்சு மாதத்தில் கூடும் சட்டசபை மீட்டிங்கில் கேள்விகள் போடும்படியாக கவர்ன்மெண்டார் உத்திரவு கொடுக்க இஷ்டப்படுவார்களா?

ஜ. 13. எத்தனை மீட்டிங்குகள் இவ்வருடத்திற்குள் கூடுமென்பது எத்தனை மசோதா ஆக்ட்டுகள் ஆலோசனைக்குக் கொண்டுவரப்படுமோ அவைகளைப் பொருத்ததாக விருக்கிறது. இன்னும் இவ்வருடம் எத்தனை மீட்டிங்குகள் நடக்குமென்று இப்போதே முன்னடி கவர்ன்மெண்டார் சொல்லமுடியாது. இப்போது அனுஷ்டானத்தி லிருக்கும் வழக்கத்தையே அனுஷ்டித்து வர கவர்ன்மெண்டார் விருப்பமுடையவர்களாக விருக்கிறார்கள்.

கே. 16. பிளேக் நோய் என்கிற சந்தேகத்தின்பேரில் தஞ்சாவூரில் அதிகாரிகளுடைய உத்திரவின்பேரில் ஒரு முஸ்லீம் பிரேதம் தகனம் செய்யப்பட்ட விஷயம் கவர்ன்மெண்டாருக்குத் தெரியுமா? அந்த மனிதனுக்குக் கண்ட நோய் பிளேக் என்று நிர்ணயித்தது நியாயமல்லவென்பது கவர்ன்மெண்டாருக்குத் தெரியுமா? ஒரு முஸ்லீமினுடைய பிரேதத்தை தகனஞ் செய்வது அவனுடைய மதசம்பந்தமான கொள்கைக்கு விரோதமென்பது கவர்ன்மெண்டாருக்குத் தெரியுமோ? அடியிற்கண்ட மதசம்பந்தமான கிரிகைகள் அனுஷ்டிக்கப்படும்படி அதிகாரிகள் ஏற்பாடு செய்யாமற்போனது நியாயமா? கவர்ன்மெண்டார் இது விஷயமாக விபரமான ரிப்போர்ட் தருவித்து பயிரங்கப்படுத்த இஷ்டப்படுவார்களா?

ஜ. 16. கவர்ன்மெண்டாருக்கு இதுவரை இந்த சமாசாரம் தெரியாது ரிப்போர்ட்டு அனுப்பும்படி எழுதியிருக்கிறார்கள்.

ஆனரேபில் மிஸ்டர் K. R. V. கிருஷ்ணராவ்.

கே. 18. பெஜவாடா, ராஜமகேந்திரபுரம் சமால்கோட், வால்டேர் ஆகிய இந்த ரெயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரங்களில் மிட்டாய், பழம் விற்பனை செய்கிறவர்களிடமிருந்து மதிராஸ் தென் மராட்டா ரெயில்வே கம்பெனியார் அதிகப்படியான கட்டணம் வாங்கிக் கொண்டு வருகிறார்கள் என்பது கவர்ன்மெண்டாருக்குத் தெரியுமா? இப்படி ரெயில் கம்பெனியார் வாங்கிக்கொண்டுவருவதால் ரெயிலில் பிரயாணஞ் செய்யும் பொது ஜனங்கள் நல்ல சாமான்களை நயமான விலைகளுக்கு வாங்கமுடியாமற் கஷ்ட நஷ்ட மடைந்துவரு

வது கவர்ன்மெண்டாருக்குத் தெரியுமோ? தென் இந்தியா இருப்புப் பாதைகளிலும் வட மேற்கு இருப்புப்பாதை கம்பெனிகளில் மிட்டாய் பழம் முதலிய தின்பண்டங்கள் விற்பனை செய்கிறவர்களிடம் ரெயில் கம்பெனியார்கள் யாதொரு கட்டணமும் வாங்காமலே பிளாட்பாரங்களில் விற்பனை செய்யவிடுவதுபோலவே மதிராஸ் தென் மராட்டா ரெயில்வே கம்பெனியிலும் ஏற்பாடு செய்யும்படி கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களோ?

ஜ. கவர்ன்மெண்டாருக்குச் சமாசாரம் தெரியாது. இந்தக் கேள்வியின் நகல் ஒன்று ஷை கம்பெனியின் ஏஜெண்டிற்கு அனுப்பப்படும்.

கே. 20. பிரஸ்தாப சர்க்கார் வருடத்தில் இந்த ராஜதானியில் ஐக்கிய விவசாய சங்கங்கள் ஏதேனும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றனவோ? அப்படியிருந்தால் அதன் ஜப்தா ஒன்றை பயிரங்கப்படுத்த கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களோ?

ஜ. 20. 1914 மார்ச்சு மாதம் 30-ந்தேதியுடன் முடிவான சர்க்கார் வருஷத்தில் அடியிற்கண்ட ஐக்கிய விவசாயச் சங்கங்கள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றன:—(1) ராமநாதபுரம் சாத்தூர் தாலூக்காவில் வடமலைபுரம் விவசாய சங்கம் (2) மதுரை ஜில்லா மதுரை தாலூக்காவில் ஊத்தங்குடி ஐக்கிய விவசாய சங்கம் லிமிடெட் (3) அவுல்நத்தம் ஐக்கிய விவசாய சங்கம் லிமிடெட் (4) திருநெல்வேலி ஜில்லாவில் கோவில்பட்டித் தாலூக்காவில் லிங்கம்பட்டி விவசாய சங்கம் லிமிடெட்,,

கே. 23. இந்த ராஜதானியிலிருக்கும் கௌரவ மாஜிஸ்டிரேட்டுகளுக்குள் எத்தனை பேர்கள் முனிசிபல் கமிஷனர்களாக விருப்பவர்களை கௌரவ மாஜிஸ்டிரேட்டுகளாக நியமிக்காமலிருக்க கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஜ. 23. வெளியூர்களிலிருக்கும் 753 முனிசிபல் கமிஷனர்களுக்குள் 13 பேர்கள்தான் கௌரவ மாஜிஸ்டிரேட்டுகளாக விருக்கிறார்கள். ஆதலால் இந்த விஷயம் கவனிக்கப்பட வேண்டிய தனுவசியமென்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படுகிறார்கள்,

கே. 24. பம்பாய் ராஜதானியில் அரக்கு சாகுபடி செய்யப்படுவதுபோல இந்த ராஜதானியிலும் சாகுபடி செய்யப்பட கவர்ன்மெண்டார் பிரயத்தனஞ் செய்திருக்கிறார்கள், அப்படி இதுவரையில் செய்யப்படாவிட்டால் அந்த சாகுபடி இந்த ராஜதானியிலும் செய்யும்படியாக ஏற்பாடு செய்வார்களா?

ஜ. 24. கவர்ன்மெண்டாருக்குத் தெரிந்தவரையில் அந்த சாகுபடி இந்த ராஜதானியில் செய்யப்படவில்லை, அதைப்பற்றியும் விசாரணை செய்யவும் கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படவில்லை,

(இதன் தொடர்ச்சி 442-ம் பக்கம் பார்க்க.)

MADRAS MARKET REPORT.
சென்னை மார்க்கட் ரிப்போட்டுகள்.

Piece goods.
சீமை ஜவுளி.

பொது:—மார்க்கட் முந்திய மாத சஞ்சிகையில் சொல்லப்பட்டிருந்ததுபோல அவ்வளவு மந்தமாயில்லை. சற்று சுருசுருப்பு காட்டிக்கொண்டு வருகிறது. கோராஷர்ட்டிங் கனத்த ரகங்கள், கோராஜாக்நட்கனத்தரகங்கள் ஆகிய இவைகளில் இப்போது உபாயபேரம் நடந்துகொண்டு வருகிறது. கோராதோர்வத்திகளிலிருந்த கையிருப்பு குறைந்துபோய்விட்டது. கோராமல்லுகளுடையவிலை ஒருநிதானத்திலில்லை. ரூ. 4-8 முதல் ரூ. 5 வரையில் ஏறி யிறங்கிக்கொண்டிருக்கிறது கையிருப்பு கரைந்துபோய்விட்ட போதிலும் விலை தாழ்ந்திருந்த காலத்தில் இண்டெண்டு செய்யப்பட்ட 1000-ம் அல்லது 1500 பேல்கள் இப்போது எதிர்பார்க்கப்படுகிறபடியால் விலை சமீபகாலத்தில் ஏறுமென்று நினைக்கக்கூடவில்லை. வெளியூர்களிலிருந்து சிலவியாபாரிகள் வந்து சரக்குவாங்கிக்கொண்டு போகிறார்கள். பணக் கசாலா முந்திய மாதத்தைப் போல் அவ்வளவு வேகமாயில்லை. இன்டெண்டுகள் உபாயமாகக்கொடுக்கப்பட்டுவருகின்றன

Grey Shirtings.
கோரா காடா.

டிமாண்டு உபாயம். தற்காலவிலை 54 இன்சு ரூ. 9 முதல் ரூ. 10 பீசு ஒன்றுக்கு. 48. முதல் 50 இன்சு ரூ. 8, 9, 9¼, 11.

Grey Jaconets.
காரிகம் ஜாக்நட்.

சென்றமாதத்திற்கு இம்மாதம் விலை 1 அணா 2 அணா குறைந்துபோய்விட்டது. டிமாண்டில்லை. நாளது தேதிவிலை ரூ. 4 முதல் ரூ. 4-10.

Twist and yarn.
நூல்.

மார்க்கட் மிகவும் மந்தமாயிருக்கிறது. மியூல்சரக்கு கையிருப்பு பூஜ்ஜியம். வர்ணசரக்கு கையிருப்பு போதுமானதிருக்கிறது. ஆனால்வாங்குவாரில்லை,

10' ஜியார்ஜ்மாயல் ரகம்	...	ரூ.	3	12	6
40' கிளாஸ்கோ	...	,,	4	6	0
60' மியூல்	...	,,	4	3	0
55' மியூல்	...	,,	4	4	6
60' முதல்ரகம் மீடியோ	...	,,	6	0	0
50' இரண்டாவதுரகம்	...	,,	5	6	0

வர்ணநூல்.

40' முழுநிறை அறைமஞ்சள்.		,,	4	10	0
40' ஆரஞ்ஜ்—முழுநிறை	...	,,	4	14	0
44/40' அறைமஞ்சள்	...	,,	4	4	6
ஷை ஆரஞ்	...	,,	4	8	6
60' மயில் சிகப்பு	...	,,	9	2	0

Potatoes.
உருளைக்கிழங்கு.

மார்க்கட் மிகவும் மந்தமாயிருக்கிறது. பெங்களூர் மேலூர் சரக்குகள் வந்துக்கொண்டிருக்

கின்றன. வெளியூர்களுக்கும் சரக்குகள் அனுப்பப்பட்டுவருகின்றன செங்கற்பட்டு, திண்டிவனம், காஞ்சிவரம், காக்கிநாடா முதலிய விடங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. இப்போது சுமார் ஆயிரமூட்டை கையிருப்பிலிருக்கிறது. நாளதுதேதி விலை.—

கண்டி ஒன்றுக்கு ரூ. 20.

பெரிய ரகமும் நடுத்தர ரகமும் கண்டி ஒன்றுக்கு ரூ. 22.

சின்ன ரகம் ரூ. 21.

கலப்பு ரூ. 20.

Gunnies.

சாக்கு.

மார்க்கட்டுமந்தம். விலைகள் ரொம்பவும் கீழே இறங்கிவிட்டன. எல்லா ரகங்களிலும் வியாபாரிகள் நஷ்டமடைந்து வருகிறார்கள். சரக்குகளும் தாராளமாய் வருகிறதில்லை. சரக்குகளுக்கும் கிராக்கியில்லை வியாபாரம் கொஞ்சம்கூடகிடையாது. பேல் ஒன்றுக்கு ரூ. 42 வீதம் கிரையஞ்செய்யப்பட்ட டுவில்வேலை 538க்கு விற்பனைசெய்ய வியாபாரிகள் தயாராகவிருந்தபோதிலும் வாங்குவாரில்லை. மற்ற ரகங்களுக்கும் கிராக்கி கிடையாது.

நேற்று உள்ளூர் மெசர்ஸ் வால்கார்ட் பிரதர்ஸ் என்கிற அவுஸ்காரர்களுக்கு ஒருவியாபாரி $44 \times 26\frac{1}{2}$ B டுவில் $2\frac{1}{4}$ ராத்தல் 87 பேல்கள் ரூ. $37\frac{3}{4}$ வீதம் சப்ளைசெய்து ரூ. 1500 நஷ்டமடைந்திருக்கிறார்.

H C		41×23	ரூ 38	8	0
do		40×28	ரூ 38	0	0
L C		40×28	ரூ 38	0	0
do		40×28	ரூ 35	0	0
B	டுவில்	40×24	ரூ 31	0	0
H C துணி 100 கெஜம்			ரூ 16	12	0
E	டிஷ		ரூ 13	0	0
5 பிரி வங்காளம் டுவயன்			160	0	0
3 பிரி	டிஷ		160	0	0

Chillies.

மிளகாய்.

குன்ட்டூர் மிளகாய் மார்க்கட் உறுதியாயிருக்கிறது. உள்ளூரில் உபாயபேரம் நடத்தப்பட்டுவருகிறது. கொளும்பில் பிளேக் வியாபித்துக்கொண்டு வருகிறபடியால் அவ்விடத்திற்கு உபாயமாக ஏற்றுமதிசெய்யப்பட்டு வருகிறது. சரக்கு கையிருப்புகம்மி, கிராக்கியும் கிடையாது, நாளதுதேதி விலை 13 முதல் $13\frac{1}{2}$ வராகன்.

பரிமிளகாய்.

இன்னும் புதியசரக்கு வரவில்லை. விளைவு கம்மி என்று கேள்விப்படுகிறோம்.

Coriander.

கோத்தமல்லி.

மார்க்கட் உறுதியாயிருக்கிறது. உள்ளூரில் சுமாரானபேரம் நடந்துவருகின்றது. ஏற்றுமதியில்லை. இவ்வருட மாசூல் கம்மிப்பட்டுப் போய்விட்டதென்று பிரஸ்தாபமாயிருக்கிறது. சரக்கு கையிருப்புடையவர்கள் இன்னும் நல்ல விலைவருமென்று சரக்கை விற்பனைசெய்யாமல் வைத்திருக்கிறார்கள். நாளதுதேதி விலை $10\frac{1}{2}$ முதல் 11 வராகன்.

மாடுகளின் மேய்ச்சல்.

குடியானவனுக்குப் பயிர்த் தொழிலிலே ஜீவனம். அந்த பயிர்த் தொழிலுக்கு மாடுகள் அவசியம் வேண்டும். அதனால் மாடுகளின் சுகத்தைத் தேடுவது அவனுக்கு முக்கியமான காரியம். அப்படி மாடுகளின் சுகத்தைத் தேடும்போது, தப்பாமல் கவனிக்க வேண்டியது மேய்ச்சலைப் பற்றி.

சாதாரணமாய் இந்த ராஜதானியில் குடியானவர்கள் மாடுகளை வயிறு ஆர மேய்க்க வகை ஒன்றும் ஏற்படுத்திக் கொள்ளாமல் கிராமப் பொதுவிலிருக்கிற நிலத்திற்கோ, மந்தைக்கோ உழுது பயிர் செய்யாதோ, செய்யக் கூடாதோ, இருக்கிற கரம்பைக்கோ, ஆற்றங்கரைகளுக்கோ, தண்ணீரில்லாதபோது ஆற்று மணலிலோட்டி அடையப் போகிறார்கள். வேலையிருக்கிறபோது வேலை செய்யாத மாடுகளையும், வேலையில்லாதபோது எல்லா மாடுகளையும் தப்பாமல் ஓட்டுகிறார்கள்.

இப்படிப்பட்ட பொது இடங்களிலிருக்கிறது அனுகூலந்தான். கொட்டில் அல்லது தொழுவத்தை விட்டு காலாறித் திரிந்து வந்தால் கால்நடைகள் சுகப்படும். கட்டுத் தரையிலேயேயிருந்தால் அசுகமடையும். ஒரு கிராமத்திலிருக்கிற மாடுகள் எல்லாம் ஒரே இடத்திற்குப் போகிறதினால் வருகிற தீமைகள் அப்படிப் போகிறதினாலுண்டாகிற நன்மைகளைவிட அதிகம். அவைகள் இன்னதென்றும், அவைகளை நீக்குவதற்கான ஏது இன்னதென்றும் இப்போது விவரிக்கப்படுகிறது.

மேற்சொன்ன பொதுஸ்தலங்களிலோ மேய்ச்சல் நிரம்பவும் பஞ்சை? இந்த இடங்களில அநேகவிதமான புல்லும் செடிகளும் உண்டு. அநேகத்தை மாடு தின்னாது. உதவுகிறவைகளிலும், அநேகம் மாட்டுத் தீனிக்கு முக்கியமாக எடுத்தவையல்ல. இப்படி மாட்டுக்குப் பிரயோஜனப் படுகிறதைவிட பிரயோஜனப்படாத புல்லும் செடிகளும் மிகுந்திருக்கும். இது முதலாவது.

இரண்டாவது என்னவென்றால், அங்கேயிருக்கிற மேய்ச்சலோ போதாது. மேய்கிற மாடுகள் எல்லாவற்றிற்கும் யேதோ சில கிராமந் தவிர மற்ற ஊரிலெல்லாம் மேய்ச்சலுக்குப் புல் அகப்படாது. அப்படி யகப்பட்டாலும் மழை காலத்திலே கொஞ்ச நாளே தவிர, வருஷ முன்னூற்றியறுவது நாளும் அகப்படாது.

அநேகர் கட்டுத் தரையில் வேலைசெய்யாத மாட்டுக்கு ஒன்றும் போடுகிறதேயில்லை. சில பேர் வேலை செய்கிற மாட்டுக்கும் போடுகிறதில்லை. வெளியில் போய் மேய்ந்து வந்தால் போதும் என்றிருக்கிறார்கள். மேய்ச்சலையே நம்பிக்கொண்டிருந்து, வீட்டிலேயும் தீனியில்லாமல் நல்ல மேய்ச்சலுமில்லாமல் சில காலம் பொறுக்குகிறதற்கும் ஒன்று மகப்படாமல் போகிறது. அதனாலே மாடு தின்கிற தீனி வயிற்றிற்கும் போதாமல், மெலிந்து நோஞ்சலாய்ப் போகும்.

சில ஜில்லாக்களில் மாடுகளுக்கு வயசு முதிர்ந்து அநேக நாள் வரையில் விதை (காய்) அடிக்கிறதில்லை. மற்ற மாடுகளோடு கலந்து ஓட்டிவிடுகிறார்கள். ஒரு மந்தையில் கன்றுக்குட்டி, கிடாரி, கறக்கிறமாடு, வரட்டுமாடு, பலப்பட்டது, பலப்படாதது, எருமைக்கடா, எருது மாடு, கிழம் கட்டை எல்லாம் கலந்திருக்கும். இப்படி கலந்திருப்பதில் எதை எது மெதித்தது எப்போது மெதித்தது என்று சொல்லல்லத் தெரியாது. நல்ல ஜாதிக் கன்றுகள் வேணுமென்று நினைத்தாலும் இப்படி கலந்து ஓட்டுகிறதினால் சில காளைகள் பலப்படுகிறதற்குவயசு வராத சில கிடாரிகளையும் மெதித்துவிடும். மந்

தையிலிருக்கிற நல்ல மாடு, கெட்டமாடு, நோஞ்சல் நொடி எல்லாம் மெதிக்க ஏதுவாயிருக்கிறது.

மேலும், வேறுபாடு இல்லாமல் இப்படி சலந்திருப்பதினால் ஊரில் ஒரு மாட்டுக்கு கோமாரி வந்தால் அது மற்ற மாடுகளோடு சலக்கிறதினாலே அவைகளுக்கும் கோமாரி வரும். வெக்கை வந்தாலும் அப்படித்தான். எல்லா மாடுகளுக்கும் பரவி அதிக நஷ்டம் ஏற்படும்.

இப்படிச் செய்வதால் விலையுள்ள எருவும் நஷ்டமாய்ப் போகிறது. சில சமயத்தில் சாணியைப் பொறுக்கி மூட்டைதட்டி எரிக்கிறார்கள். இதில் மூத்திரம் மாத்திரம் வீணாய்ப்போகிறது.

மேய்ச்சலுக்காகக் காட்டுக்கு மந்தைகளை ஓட்டினால் சாணியைப் பொறுக்கமுடியாது. பொறுக்கினாலும் சவரணையாய்ப் பொறுக்க முடியாது அதனாலே சாணி, மூத்திரம் எல்லாம் நஷ்டமாய்ப் போகிறது.

மேற் சொன்ன வழக்கத்தினால் ஏற்படுகிற தீமைகள் இன்னதென்று இப்போது நமக்குத் தெளிவாயிற்று. எரு நஷ்டமாகிறது ஒன்று; நோய் தாக்குகிறதினால் மாடுகள் சாகிறது ஒன்று; இதோடு கூட ஊரிலேயே யிருக்கிற மாடுகளுக்குத் தீனி போதாமல், மூத்திரம்ஒலை, தண்ணீர் பட்டு குளிர் பனியில் வெடைக்காதபடி போடுகிறவிரிப்பு இல்லாததால் சுகம்குறைந்து மாடுகள் உபயோக மில்லாமல் போகும். கடைசியாய்ச் சொன்னதற்கு வேறு திருஷ்டாந்தம் சொல்ல வேண்டியதில்லை இந்த இராஜதானியின் வடபாகத்தில் உள்ள குடியானவர்கள் வேலைக்கு நல்ல மாடு வாங்கவேணுமென்றுநினைத்தால், சந்தைகளுக்குத் தாவணிக்காரர்கள் கொண்டுவருகிற மைசூர் அல்லது ஒங்கோல் மாடு தினுசுகளில் ஏதாவது ஒன்றைத்தான் வாங்குவார்கள்.

இப்போது உள்ள வழக்கத்தினால் ஏற்பட்ட தீமைகள் இன்னதென்று சொல்லியாய்விட்டது. அவைகளைப் போக்குவதற்கான ஏதுக்கள் என்னவென்று பார்ப்போம்.

முதலாவது ஒங்கோல் தாலூகாவில் ஏற்பட்டிருக்கிறவிதம் மாடுகளைக் கட்டிவைத்தே தீனி போடுகிறது.

அதாவது மாடுகளைத் தொழுவத்தில் கட்டி புல்லையும் மாட்டுத் தீவனத்திற்காக விதைத்த ஜாடுபயிர்களையும், கூடுமான காலம் வரையில் பச்சையாகவே அறுத்துப் போடுகிறது. பருத்திக்கொட்டை முதலியதும் கொடுக்கிறதுண்டு அவரவர்கள் இஷ்டத்துக்குத் தகுந்தபடி சிலபேர் பருத்திக்கொட்டை, சிலபேர் வேறு ஏதாவது, சிலபேர் அதிகம், சிலபேர்கொஞ்சம், கொடுக்கிறதுண்டு இந்த ஏற்பாட்டுக்கு மாடுகளை வெளியே போகாமல் கட்டிப்போடுவதினாலே சுகம் குறையுமானதால், மாடுகள் கிடந்து உருண்டு புரண்டு திரியும்படி போதுமானவிசாலமுள்ள அடைப்பு அடைத்த இடம் அவசியம்.

நம்முடைய இஷ்டப்படி, சௌகரியத்துக்குத் தகுந்தபடி தரை மட்டத்துக்குமேல் உயர்த்தியோ, அல்லது தாழ்த்தியோ தொழுவம் கட்டிக்கொள்ளலாம். இவற்றின் விவரமும் அதிலிருந்து வருகிற கருவின் மேன்மையைபற்றியும் 191[illegible]-ம் ஜூ 14-ம் நெம்பர் கைப்பத்திரிகையில் காணலாம் இந்த ஏற்பாட்டை எல்லா இடங்களிலும் கைக்கொள்ளலாம். அதன் நன்மைகள் எல்லாருக்கும்தெளிவானது.

இரண்டாவது ஹேது முன்னையதைப் போலது தான். ஆனால் மேற்சொன்ன ஏற்பாட்டிலுள்ளபடி தொழுவத்திற்குச் சமீபத்தில் வேறாக அடைப்பு அடைத்த இடத்திற்குப் பதிலாக மழைக்காலத்தில் மாடுகள் மேய்ச்சலுக்கென்று போதுமான நிலத்தில்

புல்லை வளர்ப்பதுதான். இந்தநிலத்திற்கு மாடுகளை ஓட்டினபோது, விழுகிற மூத்திரம் சாணியினால் புல் நன்றாய் வளரும். புல் வளர்வதினால் நிலம் கொழுக்கும். கட்டையை மடித்துஉழுதுபயிர்கள் உண்டாக்கினால்நல்லமகசூல் கிடைக்கும்.

ஆனால், இந்த ஏற்பாட்டை எல்லா விடங்களிலும் வழக்கத்திற்கு கொண்டுவர முடியாது. மழையினால் விளைகிற பயிர்கள் உள்ளதும் நல்ல மழைகள் உள்ளதும் குடியானவர்களுக்கு உள்ள நில விஸ்தீரணம் அதிகமாயுள்ளதுமான ஜில்லாக்களுக்கும் தகுந்தது.

ஜீ. ஆர். ஹில்சன,

வட இலாகா விவசாய டிப்டி டைரக்டர்.

குறிப்பு:—ஜனங்கள் யுக்தி யோசனைக்காவது அல்லது ஜண்டுப் பத்திரிகைகளுக்காவது அல்லது விதைகளுக்காக மனுவாவது விவசாய டிபார்ட்மெண்டாருக்கு எழுதும்போது, அவர்கள் இந்த ராஜதானியில் தமிழ் பக்கத்திலாவது அல்லது மேற்குப் பக்கத்திலாவது இருந்தால், திருச்சினாப்பள்ளியிலிருக்கும் தென் இலாகா விவசாய டிப்டி டைரக்டருக்கும், இந்த இலாகாவில தெலுங்கு பக்கத்தில் இருந்தால், பெல்லாரியிலிருக்கும் வடஇலாகா விவசாய டிப்டி டைரக்டருக்கும், வட ஆற்காடு தென் ஆற்காடு, சித்தூர், செங்கல்பட்டு ஜில்லாக்களி லிருந்தால் கூடலூரி லிருக்கும் மத்திய இலாக்கா டிப்டி டைரக்டருக்கும் எழுதவேண்டியது. சு-ன்.

சுதேச வித்தியாபிவிருத்தி ஸங்கம்.

இச்சங்கத்தின் ஆதரணையின்பேரில் சென்னை மஹாஜனஸபா மண்டபத்தில் கூடிய பிரதமக்கூட்டத்திற்கு அடியிற்கண்ட கனவான்கள் விஜயம் செய்திருந்தார்கள்:—

ம-ா-ா-ஸ்ரீ, வி. பி. மாதவராவ், ஸி. ஐ. இ. (மைசூர்திவானாயிருந்தவர் இப்போதுபரோடா திவான்) திவான் பஹதூர், ல. அ. கோவிந்தராகவய்யர், பி ஏ.; பி.எல். ஸி, பி. ராமஸ்வாமி அய்யர் பி. ஏ., பி. எல். திவான் பஹதூர் ம. ஆதிநாராயண அய்யர் டாக்டர், ஆர். லக்ஷ்மீபதி, பி. ஏ, எம் பி. ஸி. எம் ஸி. வி. ஸ்வாமிநாதய்யர், விவேகசிந்தாமணி பத்திராதிபர். வி. சினிவாஸாசாரி எஜுகேஷனல் ரெவியூபத்திராதிபர். சே. ராஜகோபாலாச்சாரியார் பி. ஏ. சுதேச வித்தியாபிவிருத்தி ஸங்கத்தின் காரியதரிசி.

ஆங்கில பாஷாஞானம் பெறுவது தவிர மற்ற விஷயங்கள் அனைத்தும் கலாசாலைப் படிப்புவரையில் தேசபாஷைகளிலேயே கற்பிக்கப்பட வேண்டுமென்பதைப் பற்றியது.

தேசத்தார் மேன்மேலும் விருத்தியடைவதற்கும் பெரும்பான்மையோரின் க்ஷேமம் அதிகரிப்பதற்கும் ஜன ஸமூஹப்படிப்பு அவசியமென்பது எல்லாராலும் ஒப்புக்கொள்ளத்தக்கது. ஜனஸமூஹம் சுயபாஷையிலேயே விஷயங்களை தெரிந்துகொள்வார்களே தவிர வேறல்ல. ஜனக்கூட்டத்தின் அறிவு காரியகரமுள்ளதாகவும் திடமாகவும் இருக்க வேண்டியதற்கு தற்காலத்தில் இத்தேசத்து ஜனங்களை உற்சாகப்படுத்தக்கூடிய மேல் நாட்டு நோக்கங்கள் இத்தேசத்தாரை எட்டச் செய்யவேண்டியது அவசியம்.

ஆங்கிலபாஷையில் படித்துத் தேர்ந்தவர்களும் இத்தேசத்து ஜனஸமூகமும் தற்காலத்தில் ஒரு சேர்க்கையின்றி சமுத்திரத்தால் பிரிவினை பட்டவர்கள்போல காணப்படுகிறது. இரு வகுப்பினரும் தங்கள் தங்கள் உலகத்தில் ஜீவிப்பதாகத்தோற்றுகிறது. ஆங்கில பாஷையில் தேர்ந்தவர்கள் அடைந்திருக்கிற ஞானத்தை ஜனஸமூகத்தார் தற்காலப் படிப்பு முறையினால் அடைய வழியேயில்லை.

மேல்நாட்டில் பரவியிருக்கிற விசேஷ ஞானத்தினால் உண்டாயிருக்கும் லாபங்கள் இத்தேசத்து அடிபடைப் படிப்பில்மட்டும் தேச பாஷைகளில் கற்பிப்பது போதுமானதல்ல. த்விதீய வித்தியாப்பியாஸப் பாடசாலைகளில் கூட படிப்பு முறைகள் தேசபாஷைகளிலேயே இருக்கவேண்டும். இவ்விதஏற்பாட்டினால் உண்டாகும் லாபங்கள் நிதர்சனமாயிருக்கின்றன.

தற்காலத்தில் மாணாக்கர்களுக்குப் பழக்கமில்லாத இதர பாஷையின் மூலமாய் விஷயங்களைத் தெரிந்துகொள்வதைப் பார்க்கிலும் ஸ்வ பாஷையில் தெரிந்துகொண்டால் அவர்களுக்கு உண்டாகும் ஞானம் பூர்ணமுள்ளதாக இருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. இதனால் படிக்கும் விஷயங்களை கண்டறிய ஹேது உண்டாவதுடன் தற்காலத்துப் படிப்பு முறைகளில் ஏற்பட்டிருக்கும் கால விளம்பம்குன்றி, படிப்பில் விசேஷ கவனமுண்டாவதற்கு அனுகூலமும் உண்டு. வளரும் மனதிற்கு காலமும் திடமும் அனுகூலம் செய்ய மற்றொரு பாஷையை லாபத்துடன் கற்கஸௌகரியமுண்டு. அந்த வேறு பாஷை பின்வரும் காரணங்களால் ஆங்கில பாஷைதான். ஆங்கில பாஷை நமது ராஜாங்க பஷையாயிருப்பதாலும் கவர்மெண்டு உத்தியோகம் மற்றுமுள்ள அநேக தொழில்களில் பகுந்துகொள்ள அனுகூலமுள்ளதாயிருப்பதாலும் நாகரீகமுள்ள தேசத்தார் கொண்டிருக்கும் நோக்கங்களைக் கைகொள்வதற்கும் ஸாதகமாயிருக்கும். ஆகையால், ஆங்கிலம் கற்க ஆரம்பிப்பது அடிப்படைப் படிப்பின் அந்தத்திலாவது த்விதீய வித்தியாப்பியாஸப்படிப்பின் ஆதியிலாவது இருப்பது நலம்.

இவ்வித மாறுபாடுகள் கவர்மெண்டு பாடசாலைகளிலும், கவர்மெண்டாரிடம் திரவியஸஹாயம் பெற்றவும் பெறாதவுமான பாடசாலைகளிலும் செய்யப்படவேண்டியது அவசியம். கவர்மெண்டார் இந்த நூதன ஏற்பாடுகளை ஆமோதித்தாலொழிய காரியஸித்தி பெறாது.

சாஸ்திரப்படிப்பு, பொதுப்படிப்பு இவற்றில் படிப்புக் கற்பிக்க உபாத்தியாயர்களும் புஸ்தகங்களும் ஏற்படுவது எவ்விதம் என்கிற சர்ச்சை உண்டாகிறது! புஸ்தகங்களும் உபாத்தியாயர்களும் ஏற்படும் வரையில் இந்த நூதன ஏற்பாட்டைக் கைக்கொள்ளாமலிருப்பது அலையோய்ந்தபின் சமுத்திரஸ்நானம் செய்யத் தீர்மானிப்பவன் நிலைமையில் இருப்பதாகும்; ஏற்கனவே தேசபாஷைகளில் சில புஸ்தகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மெகாலே காலத்தில் இது விஷயமாக சர்ச்சை உண்டாகி ஆங்கில பாஷைப் படிப்பில் தேறினவர்களை தங்கள் தேசத்தாருக்கு தாங்கள் கற்றதை புஸ்தகங்கள் மூலமாய் தெரிவிப்பார்களென்று அக்காலத்தில் தங்கள் ஸம்சயத்தை நிவர்த்தி பண்ணிக்கொண்டார்கள். தற்காலத்தில் அநேகர் இவ்வித ஏற்பாடுகள் நிறைவேறுமென்று நம்பி சில புஸ்தகங்கள் பிரசுரம் செய்து வருகிறார்கள். கவர்மெண்டார் பரிசளிப்பதாக பிரசுரம் செய்தால் கூடிய சீக்கிரத்தில் புஸ்தகங்கள் வெளிவரும். தேவைக்கேற்ற உற்பத்தியுண்டாகும். சென்னையில் விஜ்ஞான சந்திரிகாமண்டலி என்றொரு சங்கம் ஏற்பட்டிருக்கிறது. அரசங்கத்தாரின் முயற்சியால் சென்ற ஏழு வருஷகாலத்தில் அநேக சரித்திர புஸ்தகங்களையும் சாஸ்திர புஸ்தகங்களையும் பிரசுரம் செய்திருக்கிறார்கள்,

இதனால் கவர்மெண்டார் இது விஷயத்தில் முயற்சி யெடுத்துக் கொண்டால் காரியம் கைகூடிவருமென்பதற்குச் சந்தேகமில்லை. இப்பொழுது பாடசாலைகளில் கற்பிக்கும் உபாத்தியாயர்கள் கொஞ்சம் அனுபவத்துடன் தேச பாஷைகளில் படிப்பிப்பார்கள்.

த்விதீய வித்தியாப்பியாஸப் பாடசாலைகளிலும் தேசபாஷைகளின் மூலமாய் படிப்பு முறைமைகள் ஏற்பட்டால் இனி ஏற்படும் சாஸ்திர பாடசாலைகள் தொழில் தொரைகள் கற்பிக்கும் பாடசாலைகள் இவைகளில் ஏற்படும் புஸ்தகங்களுக்கு வேண்டிய நூதன பதங்கள் தேசத்து ஜனங்களுக்குப் பழக்கத்தில்வர அனுகூலமுண்டு. சென்ற ஐம்பது வருஷகாலமாக தேச பாஷைகளில் படிப்பு இல்லாமையால் தேசத்தில் ஒளிந்துபோன அநேக புராதன சாஸ்திரங்களும் அவற்றிலுள்ள பதங்களும் வெளிவர அனுகூலமுண்டு. இவ்விதமாக அறிவு பரவ எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கும் விஷயங்கள் தெரிந்து கொள்ள ஸாதகமுண்டு.

ஆங்கிலம் ஜன சமூகத்திற்குப் பொதுபாஷையாக மாட்டாதென்பது திண்ணம்.

இப்பொழுது ஏற்பட்டிருக்கும் விவசாய கலாசாலைகள் பாடசாலைகள் பயிரிடுவோரின் ஹையாததிற்காக ஏற்பட்டிருக்கும் அவைகள் தேசத்திற்குப் பயன்படாததிற்குக் காரணம் அப்பாடசாலைகளில் படிப்பு முறைகள் தேச பாஷைகளில் ஏற்படாததனாலேதான்.

குழந்தைகளின் வளர்ப்பு.

குழந்தைகளை சரியானபடி வளர்ப்பதும், தக்கபடி போதிக்கும் விஷயத்தில் ஆங்கிலேயரைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் வேறெந்த ஜாதியாருமில்லை. நாமும் குழந்தைகளை அதிக பட்சமாய் ஆதரிக்கிறோமல்லவா? இப்படி நாம் குழந்தைகளைப் பட்சமாய் நடத்த நடத்த குழந்தைகளுக்கு கெடுதி பழக்கங்கள் படிகிறதே தவிர ஒழுங்கான பழக்கம் படிகிறதேயில்லை. குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கும், படிப்புக்கும், நடத்தைக்கும் ஆங்கிலேயர் நம்மைக் காட்டிலும் அதிக சிரத்தை யெடுத்துக் கொள்ளுகின்றனர். குழந்தைகளை இளம் பிராயத்திலேயே "போர்டிங் ஸ்கூல" என்று சொல்லப்படும் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பி விடுகின்றனர். அவ்விடத்தில் நானாவித குழந்தைகள் படிக்கின்றன. தயவு தாக்ஷிண்ய மென்பது அங்கே கொஞ்சங்கூட கிடையாது. பிள்ளைகள் ஏதாவது தப்புசெய்தால் குற்றவாளி எப்பேர்ப்பட்ட பெரிய உத்தியோகஸ்தர்கள் தன் பிள்ளையாயிருப்பினும் செவ்வனே தண்டிக்கப்படுவான். மெ பள்ளிக்கூடங்களில் படிப்பைக் காட்டில் நல்ல நடத்தையே முக்கியமாக கவனிக்கப்படுகிறது. பையன்கள் கெட்டவழிக்கு செல்லாதிருப்பதற்காகவே அநேக கௌரவ உத்தியோகஸ்தர்கள் தங்கள் குழந்தைகளை இத்தகைய பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புகின்றனர். இரண்டாவது, பிள்ளைகள் தகப்பனுருடைய உதவியை ஒருபோதும் கவனியாமலிருக்கும் பொருட்டு அப்பள்ளிக்கு அனுப்பப் படுகிறதாகத் தெரிகிறது. இவ்வித பழக்கம் மிகவும் உத்தமமே. ஏனெனில், பிள்ளைகள் பெற்றோர்களோடேயே நிரம்ப காலம் பழகிவிட்டால், பெற்றோர்கள் அப்பிள்ளைகளின் பேரில் வைத்திருக்கும் மிதமிஞ்சிப் போன பக்ஷத்தால் வீணாக் கெட்டுப் போகின்றனர்.

குழந்தைகளது உடம்புக்கு எவ்வித உணவு ஒத்துக் கொள்ளுமோ அவற்றையே புசிக்கும்படி, தாய்மார்

கள் வற்புறுத்துகின்றனர். அவ்வித பண்டங்கள் ருசியா யிராவிட்டாலும் குழந்தைகள் வாயில் எவ்விதமாகவாவது திணித்து உண்ணும்படி செய்கின்றனர். சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு அளித்திருக்கும் சுதந்தரம் அதிகமாகவே யிருக்கிறது. உதாரணமாக, நான் ஒரு ஓட்டலுக்கு சென்றபோது அவ்விடத்தில் கௌரவமுள்ள கனவான் ஒருவர், 13 வயதுள்ள தனது மகனுக்கு சிகிரெட்டு பிடிப்பதற்காகதன் சட்டைபையிலிருந்த தீப் பெட்டியை எடுத்துக் கொடுத்தார். இதைக் கண்டதும் எனக்கு ஆச்சரிய மதிகமாயிற்று. என் ஆச்சரியத்தை கண்ணுற்ற கர்னலாகிய அக்கனவான் என்னை பார்த்து சிறு பையன்களுக்கு இம்மாதிரியான சுதந்திரங்கள் அளிப்பது மாதொரு பிசகு மில்லையென்றும், அப்பையன் கெட்ட சகவாசம் செய்யாம லிருக்கிறானா வென்பதை கவனிக்க வேண்டியதுதான். பெற்றோர்களுடைய முக்கிய கடமை யென்றும் சொன்னார்

உடை உடுத்துவதில் ஆங்கிலேய குழந்தைகளுக்கு அதிக ஆவல் உண்டு. அப்பக்கத்து குழந்தைகள் உடுப்பு அதிக பரிசுத்தமா யிருக்கிறது. உடுப்புகளில் அழகானவைகள், இன்னது விலையுயர்ந்தவைகள் இன்னது என்று பதிவுசெய்யக்கூட குழந்தைகளுக்குத் தெரிகிறதில்லை. [illegible]ளில் அப்பேர்ப்பட்ட உயர்ந்த வஸ்துக்களை குழந்தைகள் நினைக்கும்படி பெற்றோர்கள் வைத்துக் கொள்வதில்லை. கடைகளுக்குக் கூட குழந்தைகளை அழைத்து செல்வதில்லையாம்! வேலை செய்வதில், சற்றே கடினமான வேலைகள் புருஷர்களாலும், பாக்கி வேலை முழுதும் ஸ்திரீகளாலும செய்யப்பட்டு வருகின்றன. நம்முடைய ஸ்திரீகள்போல இடுப்பில் குடம்குடமாக தண்ணீர் எடுத்து இரண்டு நடை ஆங்கில ஸ்திரீகள் நடந்தால் அவர்கள் பிழைப்பது வீடு திரும்புவதே எம்பிரான் புண்ணியமாகிவிடும்.

லண்டன் படிப்பும் கைத்தொழிலும்.

ஒரு தினத்தில் பெரிய கனவானொருவர் சில புத்தகங்களை அதிசிரத்தையோடு படிப்பதைக் கண்டேன். அக்கனவானுக்கு யாதொரு செல்வக் குறைவுமில்லை. இருந்தபோதிலும் அவர் படித்த மும்முரத்தை கண்ணுற்ற யாவருக்கும், படிப்பதை தவிர பிழைப்பதற்கு வேறு வழியில்லாதவன் எவ்வளவு ஜாக்கிறதையோடிருப்பானோ அவ்வளவு சிரத்தையாய் அக்கனவான் படித்ததாக தோன்றியது. இதை நான் கண்ணுற்றதும் அக்கனவானை காரணம் கேட்டேன். அதற்கவர் தனது மனதும், புத்தியும், எவ்விதத்திலும் கெடாம லிருப்பதாகவும், மனதில உண்மையை செவ்வனே யூன்றவைப்பதாகவுமே நல்ல புத்தகங்களைப் படிப்பதாகவும் வருவது தான் அடைந்திருக்கும் செல்வத்தைத் தவிர இதர பொருள் சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசையுடனே படிக்கவில்லை யென்றும் உத்தரவு கூறினார். ஆண் பெண் முதலிய யாவரும் படிப்புக்கு மிக்க அபிமானம் வைத்திருக்கின்றனர். தினசரி சமாசாரப் பத்திரிகைகள் படிக்காதவர்கள் ஒருவரும் கிடையாது. ஆங்கிலேய நாவல்கள் ஸ்திரீகள் கையை விட்டு ஒருபோதும் அகலா. அப்படி சிலர் படிக்காவிட்டாலும் வேறு ஏதாவது உபயோகமான வேலையை செய்வார்களே தவிர சோம்பலா யிருப்பதில்லை. இவ்விதம் நம் ஜனங்களும் ஏன் சுறுசுறுப்பாயிருக்கக்கூடாது? நாமோ வேலை செய்தால நம்முடைய கௌரவம் குறைந்து போகிறதென்று எண்ணுகிறோம். நமது எண்ணத்திற்கேற்ப ஜனங்களும் நாம் வேலை செய்து கொண்டிருந்தால நம்மை மதிப்பதில்லை. இங்கிலாந்திலோ கண்ணியமாய் வேலை செய்து தருபவனுக்குத்தான் அதிககௌரவமளிக்கப்படுகிறது நம்மைப்போல வேலைக்கும், கௌரவத்துக்கும் யாதொரு சம்பந்தமும் ஆங்கிலேயர் வைப்பதில்லை. அநேகமாய் வேலைப்பாடுக்கே இவர்கள் அதிகமதிப்புகொண்டாடுகின்றனர். பிறர் உதவியில்லாமல கடவுள் அளித்த தன் கை யுதவியைக் கொண்டே வேலைசெய்து சம்பாதிப்பவனை ஆங்கிலேயர் தெய்வமாகத் தொழுகின்றனர். இன்றைய தினத்திலும் லண்டனில் வேலையாட்கள் உயர்ந்தபிரபுக்களைகூட கவனிப்பதில்லை. லண்டன் நகரத்து தெருக்களில் உயர்ந்த பிரபுவும் அவருக்குப் பக்கத்தில், தாழ்ந்த ஓர் கூலியாளும் ஒருவரோடும் முட்டிக்கொள்ளும்படி அவ்வளவு பக்கத்தில் நடந்து செல்வதை நான் அநேக தடவை நான் கண்ணுற்றிருக்கிறேன். யாது காரணத்தாலும் ஓர் ஏழை மனிதன் ஓர் பெரிய உத்தியோகஸ்தனுக்காக வழியை விட்டு ஒதுங்குவதில்லை. இதனாலேயே ஆங்கிலேய ஜனங்கள் எவ்வளவு சுயேச்சையாக வாழ்கிறார்களென்று நாம் அறியலாம். தவிரவும சரியான

காரணமில்லாமல் ஜனங்கள் விஷயத்தில் எவ்வகையான சட்டங்கள்ஏற்பட்ட போதிலும், அச்சட்டங்களுக்கு ஜனங்கள் இணங்குவதேயில்லை இதனால் ஆங்கிலேயர்களுக்கு ராஜவிஸ்வாஸம் ஏற்படுகிறதில்லையென்றும் நம் நேயர்கள் ஊகிக்கக்கூடாது. நியாயமாக ஓர்சட்டம் ஏற்படுத்தப்பட்டால், அச்சட்டப்படி வெகு மரியாதையோடு ஜனங்கள் நடந்து வருகின்றனர். அப்படி சிலர் நடக்காதபக்ஷத்தில் உடனே அவர்களை தன்பதாக்ஷிண்யமன்றி தண்டிக்கப்படுகிறது. லண்டனில் போலீஸ்காரர்களுக்கு நம்போலீஸ்தாரைக்காட்டிலும் அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தெருக்களில் எவ்வளவு வண்டிகள் போய்க்கொண்டிருந்த போதிலும் வண்டிகள் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளாததின் காரணம் போலீஸ்காரரே. உதாரணமாக, ஓர் பாதையில் இரண்டு பக்கத்திலிருந்தும் எதிர எதிராக இரண்டு வண்டிகள் வந்து விட்டால் அத்தெரு முனையிலிருக்கும் போலீஸ்காரன் உடனே ஒரு வண்டியை நிறுத்தும்படி உத்திரவு செய்கிறான். பிறகு எதிர்வண்டி சென்ற பிற்பாடு நிறுத்தி வைத்த வண்டியை விடுகிறான், இப்படி செய்தால் என் வண்டிகள் மோதிக் கொள்கின்றன?

'மிலிடரி' என்று சொல்லப்படும் சண்டை உத்தியோகத்திலிருப்பவர்கள் தங்கள் மேல் உத்தியோகஸ்தர்களிடம் அதிக மரியாதையாயிருக்கவேண்டியது முக்கிய கடமையாகும். மேல் உத்தியோகஸ்தர்கள் கீழோரை எப்பேர்ப்பட்டகாரியம் (நல்லதோ, கெட்டதோ) செய்ய உத்திர வளித்தபோதிலும், கீழோர் அவைகளைச் செய்தே தீரவேண்டும். இல்லாவிடில் தக்க தண்டனை விதிக்கப்படும். உடை உடுப்பதில் அவர்கள் பரிசுத்தமாயிராவிட்டால் அபாரதம் விதிக்கப்படும். எவ்வித தொழிலுக்கும் 'இவ்வளவுமணி நேரம் தான்' என்று பதிவு செய்யப்படுகிறது. அந்த நேரத்துப் பிறகு ஒரு நொடி கூட வேலையாட்கள் வேலை செய்யார்கள் வேலை செய்யத்தொடங்குவதும் மேற்கூறிய மாதிரிதான்.

லண்டன் தெருக்களைப் போல பரிசுத்தமான தெருக்கள் யான் இதுவரையில் பார்த்ததில்லை, தெருக்களில் எக்காலத்திலும், அல்லது எவ்வேளையிலும் ஒரு சிறயல் கல் கூட அகப்படாது,—இவ்விஷயங்கள் நான் முன்னமேயே கூறியிருக்கிறேன்.

கைத்தொழில் விஷயத்தில் ஆங்கிலேயர் சுருசுருப்பை, யானசொல்லவேண்டியதில்லை, இச்சுருசுருப்பே அவர்கள் செல்வத்துக்குமுக்கிய ஹேதுவாயிருக்கிறது, நம் இந்தியாவில் தம்மிடிகள் சில சில வாகிற மாதிரி இங்கிலாந்தில் பவுன்கள் சிலவாகின்றன, இருந்தாலும் இங்கிலாந்தில் அநேக பிச்சைக்காரர்களிருக்கிறார்களில்லாதிருக்கவில்லை தொழில்கள் விஷயத்தில் ஆங்கிலேயர் எதாவது ஆச்சரியமுண்டு பண்ணிக்கொண்டேயிருக்கின்றனர். நம்மிந்தியாவில் தற்போது வேலைகள் முழுதும் அநேகமாய் 'மெஷீன்' களால செய்யப்படுகின்றன, ஆனால அம்மாதிரியான'மெஷின்' களைக்கண்டுபிடித்தவர்கள் ஆங்கிலேயர்களாகவே யிருக்கிறார்களே தவிர நம்மிந்தியாயாவரும் இது வரையில ஒரு விதயந்திரமாவது கண்டு பிடித்ததிலலை, இங்கிலாந்தில வேலை செய்யும் விஷயத்தில ஒருவருக்கொருவர் போட்டி போடுவர், இவர்கள் போட்டி போட்டு வேலை செய்வதால வேலைப்பாடு அதிக அழகாயிருக்கிறது, நம் நாட்டிலோ ஒருவன் தனக்கிட்ட வேலையைச் செய்ய அவனது நண்பன் உதவியை எதிர் பார்த்துக்கொண்டே சோம்பலாயிருக்கின்றான்.

The Hon'ble Rao Bahadur P. Kasave Pillai.

ஆனரபில் ராவ் பகதூர் பி. கேசவப்பிள்ளை.

கே. 44. வட ஆர்காடு வாலாஜாபாத்து பிர்க்காவைச சேர்ந்த திம்மணச்சாரி குப்பம் கிராம முன்சிப் சாமானகள் சப்ளை செய்ததற்காக 6-2-1913, 11-11-1912, 20-12-1911 ஆகிய இந்தத் தேதிகளில முறையே ரூபா 8-15-0 ரூபா 8-4-0, ரூபா 4-க்கும் வாலாஜாபாத தாசில்தாருக்குப் பில்களை அனுப்பினார். இந்த பில்களில முதல பில்லிற்குமட்டிலும் ரூ. 2-8-0 கொடுக்கப்பட்டது. மற்ற பில்களுக்கு யாதொரு பணமும் கொடுக்கப்படவில்லை. டிவிஷனல் ஆபிசருக்கும் ஜில்லா கலெக்டருக்கும் அப்பீல் செய்துகொண்டும் பணம் கொடுக்கப்படவில்லை. இது வாஸ்தவம் தானா என்றும் இப்படி கிராம முனிசிப்புகள் சமர்ன்கள் சப்ளை செய்ததற்காக பெற்றுக் கொள்ளவேண்டியபணத்தைக் கொண்டு வாலாஜாபாத் தாசில்தார் தம்முடைய ஆபீஸ் காம்பவுண்டுக்குள் பஞ்சமர்களுக்ககக் ஒரு கொட்டகை போட்டிருப்பது வாஸ்தவம்தானா என்று கவர்ன்மெண்டார் சொல்ல இஷ்டப் படுவார்களா? கலெக்டருடைய அனுமதியின் பேரிலும் சம்பந்தப்பட்ட கிராம முனிசிப்புகளுடைய சம்மதத்தின் பேரிலும் தாசில்தார் இந்தப் பணத்தை அப்படி உபயோகப்படுத்தி யிருக்கிறாரோ. மேலே சொல்லப்பட்ட தொகையை திம்மணச்சாரி குப்பம் கிராம முன்சிப்பிற்குப் வாப்பீஸ் செய்யும்படி பாகதாசில் தாருக்கு உத்திரவு செய்ய கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா ?

45. இரண்டு டெஜன் வாத்துக்கள் சப்ளை செய்யப்பட வேண்டும் இல்லெல் சஸ்பெண்டு செய்யப்படுவார்கள் என்று பயமுறுத்தி வாலாஜாபாத் தாசில்தார் குடிமேலூர் பூண்டி, கடேப்பேரி, சுனமதாங்கி, ஆகிய இந்த கிராமங்களின் முன்சிப்புகளுக்கு கண்டிப்பான உத்திரவு பிறப்பித்தது வாஸ்தவம் தானா? தாசில்தார் தம்முடைய சிப்பந்திகளிடமிருந்து காரணம் விசாரிக்காமல்கூட அவர்களைத் தண்டிக்க அவருக்கு அதிகாரமிருக்கிறதா? மேலே சொல்லப்பட்ட கடிதத்தை அனுசரித்து கடப்பேரிக்கு இரண்டு டெஜன் வாத்துக்கள் வாங்கி அனுப்பியும் அவைகள் தள்ளுபடி செய்யப்பட்டன வென்பது வாஸ்தவம் தானா? கிறிஸ்மஸ் பண்டிகை காலமான படியால் வாத்துகளின் விலை மிகவும் கிராக்கியாக விருந்த தென்றும் அவைகள் தள்ளுபடி செய்யப்பட்டதால் தாம் பணம் நஷ்டமடைந்திருப்பதாக மேற்படி கி. மு. தாசிலதாருக்குத் தெரிவித்துக்கொண்டது வாஸ்தவம் தானா? கி. மு. பணம் நஷ்டமடைந்திருப்பதற்கு ஏதேனும் பரிவாரம் செய்யப்பட்டதோ? அப்படிக்கில்லா விட்டால் கவர்ன்மெண்டார் ஏதேனும் பரிகாரஞ் செய்ய கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

44. அண்ட் 45. ஜ. கவர்ன்மெண்டாருக்குச் சமாசாரம் தெரியாது. ரிப்போர்ட் அனுப்பும்படி எழுதபபட்டிருக்கிறது.

The Hon'ble Mr. V. Kunhiraman Nair.

ஆனரபில் மிஸ்டர் வீ. குன்கிராமன் நாயர்.

கே. 63. பிரிடிஷ் கொச்சியில் தென்னை மரங்களுடைய வேர்களுக்கு ஒரு நூதன வியாதி கண்டு வருவது வாஸ்தவம் தானா? அப்படி உண்டாயிருப்பது உண்மையாயிருந்தால் அந்த வியாதியை ஆரம்பத்திலே அடக்கிப் போடவும் மலையாளம் தென் கன்னடம் ஜில்லாக்களிலிருக்கும் ரயத்துக்களுக்கு சமயோஜித சூழ்ச்சி அறிவிக்கவும் கவர்ன்மெண்டார் இஷ்டப்வார்களா?

ஜ. 6[illegible]. அந்த வியாதியைப்பற்றி திருவாங்கூர் கொச்சின் ரெசிடெண்டினிடமிருந்து ரிப்போர்ட் கவர்ன்மெண்டுக்கு வந்திருக்கிறது. அந்த ரிப்போர்ட்டை கவர்ன்மெண்டார் ரெவினியூ போர்டாருக்கு அனுப்பி, அந்த வியாதியைப் போக்கடிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யும்படியாக எழுதியிருக்கிறார்கள்.

கே. 68. மங்களூருக்கும் மதிராசுக்கும் ரயில் போக்கு வரத்து ஜன சௌகரியத்திற்கு ஏற்றபடியா யிருக்கும்படி செய்யக் கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஜ. இந்த விஷயத்தை கவர்ன்மெண்டார் ஏற்கனவே கவனித்திருக்கிறார்கள். சென்னையிலிருந்து மெயில் வண்டி மங்களூருக்கு அடுத்த மேமீ ஆரம்பமாக மாலை 6-10 மணிக்கு வந்து சேரும்படியாகத் தென்னிந்தியா ரயில் ஏஜண்டுடன் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

The Hon'ble Mr. K. Chidambaranatha Mudaliar.

ஆனரபில் மிஸ்டர் கே. சிதம்பரநாத முதலியார்.

கே. 69. இந்த ராஜதானியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கைத்தொழில் இலாக்கா ஜனங்கள் கைத்தொழில் ஸ்தாபனங்களை வைத்து நடத்த உதவிசெய்து வருகின்றதா? என்னவிதமாக செய்து வருகின்றது?

ஜ. 69. 26-8-1913-ல் பிரசுரமான போர்ட் சென்ட் ஜியார்ஜ் கெஜட்டைப்பார்க்கும்படியாக ஆனரபில் மெம்பர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

கே. 70. தென்னிந்தியா ரெயில்வேயில் ஒவ்வொரு ஸ்டேஷனில் நிற்கும்படியான துரு வண்டியும் அதாவது சென்னப்பட்டணத்திலிருந்து தூத்துக்குடி அல்லது தனுஷ்கோடி மட்டிலும் நேரேபோகும் வண்டிகள் போதுமானபடி யில்லாமலிருப்பதால் ஜனங்கள் கஷ்டமடைவது வாஸ்தவம்தானா? இப்பேர்ப்பட்ட துருவண்டிகள் அனேகம் போக்கு வரத்து செய்யுப்படி ஏற்பாடுசெய்ய கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஜ. 80. ஜனங்கள் கஷ்டமடைவது கவர்ன்மெண்டாருக்குத் தெரியாது. அவர்கள் அடையும் கஷ்டத்தின் விபரம் தெரியும் பரியந்தம் ரயில்வே கம்பெனியாருக்கு எழுத கவர்ன்மெண்டார் விருப்பமற்றவர்களாக விருக்கிறார்கள்.

The Hon'ble Rao Bahadur V. K. Ramanuja Chariar.

ஆனரபில் ராவ்பகதூர் வி. கே. ராமானுஜாச்சாரியார்.

கே. 80. கோயமுத்தூர் விவசாயக் கலாசாலை ஸ்தாபிக்கப்பட்டது முதல் ஒவ்வொரு ஜில்லாவிலிருந்து எத்தனை மாணவர்கள் வந்து வாசித்துப் பாஸ் செய்திருக்கிறார்கள் என்று கவர்ன்மெண்டார் அறிவிக்க இஷ்டப்படுவார்களா?.

ஜ. 80. அடியிற்கண்ட ஜாப்தாவைப் பார்க்கவும்.—

ஜில்லாக்களின் பெயர்.		வருடம்.		
		1911	—12	—13.
திருவாங்கூர்	...	5	3	0
கொச்சி	...	1	0	1
மதுரை	...	2	0	1
மலையாளம்	...	1	0	1
தென்கன்னடம்	...	1	1	0
சேலம்	...	1	0	1
திருநல்வேலி	...	1	1	0
ஐதராபாத்	...	1	0	0
மைசூர்	...	0	2	1
குடகு	...	0	1	1
விஜாகப்பட்டணம்	...	0	1	0
பெல்லாரி	...	0	1	0
தஞ்சாவூர்	...	0	0	1
நெல்லூர்	...	0	0	2
கிருஷ்ணா	...	0	0	1
கெஞ்சம்	...	0	0	1
அனந்தப்பூர்	...	0	0	1
	மொத்தம்	14	10	12

பரிக்ஷையில் தேறி டிப்ளோமா அல்லது சர்ட்டிபிக் கேட்பெற்றிருக்கிறவர்களுடைய ஜாபிதா.

ஜில்லாக்களின் பெயர்		வருடம்.		
		1911	—12	—13,
சேலம்	...	1	0	0
திருநெல்வேலி	...	1	0	0
திருவாங்கூர்	...	0	2	0
மதுரை	...	0	0	1
தஞ்சாவூர்	...	0	0	1

கே. 81. 1914–15-ம் வருடத்தில் எத்தனை மசோதா ஆக்ட்டுகள் சட்ட சபையார் ஆலோசனைக்குக் கொண்டு வரப்படும் என்றுசொல்ல கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா ?

ஜ. 81. ஏற்கனவே ஆலோஜனைக்கு வந்திருக்கும் மசோதா ஆக்ட்டுகளுடன் அடியிற்கண்ட மசோதா ஆக்ட்டுகளும் கொண்டுவரப்படும் என்று தற்காலம் சொல்லக்கூடும்,—

(1) ரத்துசெய்யும் சீர்திருத்த மசோதா ஆக்ட், (2) கால்வாய் ஓடை ஆக்ட்டை சீர்திருத்தும் ஆக்ட், (3) மதிராஸ் போர்ட்டிரஸ்ட் ஆக்ட்டை சீர்திருத்தும் ஆக்ட். (4) பிரதிநிதி மசோதா ஆக்ட் (5) விவசாய சட்டத்தை சீர்திருத்தும் ஆக்ட், (6) தென்கன்னடம் மூலவர்க்க ஸ்ரீ குகதக்கை சீர்திருத்தும் ஆக்ட்.

கே. 82. இப்போது சர்வே செய்யப்பட்டுவரும் ஜில்லா போர்ட்டார் இருப்புப் பாதை மார்க்கங்களும் 1914-15-ம் வருடம் முடிவடைவதற்கு முந்தி சர்வே செய்யப்படும் ஜில்லா போர்ட் இருப்புப்பாதை மார்க்கங்களும், 1914-15 ம் வருடம் வேலை ஆரம்பிக்கப்படும் மார்க்கங்களும், ஆகிய இவைகளுடைய ஜாப்திதாவையும் வேலை ஆரம்பிக்கப்படும் மார்க்கங்களுக்கு எவ்வளவு செலவு திட்டம் போடப்பட்டிருக்கிறதென்றும் இந்த மூலதனம் எந்த ஐவேஜியிலிருந்து கொடுக்கப்படுமென்று பயிரங்கப்படுத்த கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா ?

82. ஜ:—இப்போது சர்வே செய்யப்பட்டு வரும் ஜில்லா போர்ட் இருப்புப்பாதை மார்க்கங்கள்.

தென்னிந்தியா இருப்புப்பாதை.

தஞ்சாவூர் திருவையாறு.—சர்வே முடிந்து போய்விட்டது. ரிப்போர்ட்டும் எஸ்டிமேட்டும் எதிர் பார்க்கப்படுகின்றன.

மாயவரம் தரங்கம்பாடி (தஞ்சாவூர் ஜில்லா) விபரசர்வே முடிந்து போய்விட்டது. ரிப்போர்ட்டும் எஸ்டிமேட்டுகளும் எதிர் பார்க்கப்படுகின்றன.

மன்னார்குடி - திருத்துறைப்பூண்டி.—சர்வே முடிந்து போய்விட்டது. ரிப்போர்ட்டும் எஸ்டிமேட்டும் எதிர்பார்க்கப்படுகின்றன.

மதுரை—போடியநாய்க்கனூர்.—மதுரை ஜில்லா இஞ்ஜினீர் சர்வே செய்து வருகிறார்.

மானமதுரை-சிவகங்கை.—மதுரை ஜில்லா மேற்படி அடியிற்கண்ட ஜாப்பிதா இப்போது போடப்பட்டு வரும் மார்க்கங்களையும் 1914 15-ல் வேலை ஆரம்பிக்கப்படும் மார்க்கங்களையும் காண்பிக்கின்றது.

தென்னிந்தியா இருப்புப்பாதை.

மன்னார்குடி — நீடா மங்கலம்.—திட்டம் 5-37 லக்ஷ ரூபாய் வேலை ஆரம்பித்து நடத்தப்பட்டு வருகிறது. மூலதனம் ஜில்லா போர்ட்டார் வசூல் செய்திருக்கும் ரயில்வே செஸ் நிதியிலிருந்து கொடுக்கப்படும்.

திருத்துறைப்பூண்டி - வேதாரணியம்.—திட்டம் 12-62 லக்ஷம் ரூ. நிலம் வாங்கப்பட்டு வருகிறது. 1914-15 வேலை ஆரம்பிக்கப்படும் மூலதனம் ரயில்வே செஸ் பண்டிலிருந்து கொடுக்கப்படும்.

போதனூர் - பொள்ளாச்சி.—கோயமுத்தூர் ஜில்லா திட்டம் 12-10 லக்ஷம் ரெயில்வே செஸ் நதியிலிருந்து பாதித்தொகையும் பாக்கி பாதித் தொகைக்கு டிபன்சர் விடப்படும்.

திருநெல்வேலி—திருச்செந்தூர்.—திட்டம் 17-25 லக்ஷம் ரூபாய், மூலதனம் பாதித் தொகை ஜில்லா போர்ட்டு ரயில்வே செஸ் நிதியிலிருந்தும் பாதித்தொகைக்கு டிபன்சர் விடப்படும்.

சூரமங்கலம் சேலம், சேவ்வாப்பேட்டை ஆத்தூர்.—முறையே 3.88, 12.76, லக்ஷ ரூபாய் மூலதனம், ரெயில்வே செஸ் நிதியைக்கொண்டு டிபென்சர்களைக் கொண்டும் கொடுக்கப்படும்.

உளுந்தூர்பேட்டை—சின்ன சேலம்.—திட்டம 12-லக்ஷ ரூபாய். ரெயில்வே செஸ்ஸைக் கொண்டும் டிபன்சர்களைக் கொண்டும் இந்த மார்க்கத்தின் வேலை போடப்படப் போகிற பண்ருட்டி திருச்சினாப்பள்ளி மார்க்கத்தின் வேலை ஆரம்பத்தைப் பொருத்தது. பின்னால் சொல்லப்பட்ட இருப்புப்பாதைக்காக ரூ $5\frac{1}{2}$ லக்ஷம் இந்தியா கவர்ன்மெண்டார் சாங்ஷன் செய்திருக்கிறார்கள்.

COMMERCIAL CASES IN COURT

வியாபார சம்பந்தமான கேஸ்கள்.

MADRAS HIGH COURT.

சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்.

அசல்தரப்பு.

சவுத் இந்தியன் எக்ஸ்போர்ட்டு கம்பெனி—வாதிகள்.

vs.

டி. என். விஸ்வநாதய்யர் வகையரு—பிரதிவாதிகள்.

கேஸின் விபரம்:—திருச்சினாப்பள்ளியில் டி. கிருஷ்ணய்யர் என்பவர் தோல் வியாபாரம் செய்துவந்தார். அவர் சென்னப்பட்டணத்திலிருக்கும் வாதிகளுக்கு சில அடமானங்கள் எழுதி வைத்தார். அந்த அடமானங்களில ஒன்று மட்டிலும் முதலில் சென்னையிலிருக்கும் மெசர்ஸ் பெஸ்ட் அண்டு கோ என்பவர்களுக்கு எழுதி வைக்கப்பட்டு, பிறகு வாதிகளுக்கு டிரான்ஸ்பர் செய்யப்பட்டது. அதன்பிறகு 1909 மார்ச்சு மாதத்தில் கிருஷ்ணய்யர் இறந்து போய்விட்டார். கிருஷ்ணய்யருக்கு பிள்ளை கிடையாது. அவருடைய வியாபாரம் அவருடைய மைனர் விதவை பட்டம்மாளால் நடத்தப் பட்டது. கிருஷ்ணய்யருடைய தமையன் ஸ்வீகாரப் புத்திரராகிய பிரதிவாதி மேற்படி பட்டம்மாளிடமிருந்து அதிகாரப்பத்திரம் பெற்றுக்கொண்டு பட்டம்மாளுக்காக மேற்படி வியாபாரத்தை நடத்திவந்தார். இப்படி நடத்திவந்த வகையில் பட்டம்மாள் பாராதீனங்கள் செய்ய நேர்ந்தது. வாதிகள் தங்களுடைய அடமானங்கள் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்கள். இந்த வியாஜ்ஜியத்தில் சொத்தைப் பாராதீனஞ்செய்ய விதவைக்குப் பாத்தியதையில்லை என்றும், பட்டம்மாள் மைனர் என்றும் கக்ஷி சொல்லப்பட்டது.

லாயர்கள்:— சொலிசிட்டர்கள் மெசர்ஸ் பிரான்சன் அண்டு பிரான்சனுடைய உதவியுடன் பாரிஸ்டர் மிஸ்டர் கிராண்ட் வாதிகள் தரப்பிற்கும் சொலிசிட்டர்கள் மெஸர்ஸ் ஷார்ட் அண்டு பியூஸ்களுடைய உதவியுடன் மெசர்ஸ் சி. பி. ராமசாமி அய்யரும், டி. ஷாமியரும் பிரதிவாதிகள் தரப்பிற்கு ஆஜரானார்கள்.

தீர்ப்பு:— ஸாக்கார் முறையில் தனக்குக் கிடைத்திருக்கும் தன்னுடைய புருஷனுடைய வியாபாரத்தை விதவை நடத்த பாத்தியதையுடையவள். அந்த வியாபாரத்தை நடத்தும் வகையில் சில பாராதீனங்கள செய்ய அவசியம் ஏற்பட்டுச் செய்தால் அவைகள் செல்லுபடியுள்ளவை என்று தீர்மானித்தார்கள். கிருஷ்ணய்யர் எஸ்டேட்டிற்கு விதவைக்குப் பிறகு அனந்தரவார்சு பாத்தியுடைய விஸ்வநாத அய்யர் விதவையிடமிருந்து அதிகாரபபத்திரம வாங்கிக்கொண்டு வியாபாரம் நடத்தி விதவைக்குக் கடன் கொடுக்கும்படி வாதியை தூண்டிவிட்டு, தனக்கிருக்கும் அனந்தரவார்சு பாத்தியதையைப் பிரயோகப்படுத்தி விதவை மைனர் என்றும் பாராதீனஞ் செய்ய பாத்தியதையற்றவள் என்றும் கக்ஷி சொலல பாத்தியதையற்றவரென்றுந் தீர்மானித்தார்கள். ஆகவே 1, 9, பிரதிவாதிகள் பேரில் ரூ. 26,032-13-2க்கும் செலவு தொகைக்கும் வாதிக்கு டிக்கிரி கொடுக்கப்பட்டது.

A Trade Mark Case.

வர்த்தக குறி கேஸ்,

சீமை ஜவுளி வியாபாரிகள் கவனிக்க வேண்டிய முக்கியமான ஒரு கேஸ் சிந்து கமிஷனர் கோர்ட்டாரால் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. கராச்சியிலிருக்கும் நருமல்ஜீவாராம் கம்பெனியர் பம்பாய் கம்பெனியார் விற்பனை செய்யும் "பம்பாய் கம்பெனியார் குல்பர்கா" என்று சொல்லப்படும் தோம்பு பேரில் போடப்பட்டிருக்கும் பொம்மை போல அச்சுபோட்டு தோப்பு ஜவுளியை இறக்குமதி செய்தார்கள். பம்பாய் கம்பெனியார்கள் ஆக்ஷேபித்து வர்த்தகக் குறியை கிரஹித்த குற்றம் நார்மூல் கம்பெனியார் பேரில சாட்டினார்கள் இதன்பேரில் மாஜிஸ்டிரேட் பிரதிவாதிகளுக்கு சம்மன் அனுப்பினார். இதன்பேரில மாஜிஸ்டிரேட் கோர்ட்டில நடந்துவரும நடவடிக்கைகளை ரத்து செய்யும்படியாக பிரதிவாதிகள் சிந்து ஜுடிஷியல கமிஷனர் கோர்ட்டில் மனு செய்து கொண்டார்கள். தோம்பின் உடலிலும் கரையிலும் போடப்பட்டிருக்கும் புட்டா அல்லது விநோதமான சித்திரம டிரேட் மார்க்காக மாட்டாது. இப்பேர்ப்பட்ட சித்திரங்களுக்கு டிரேட் மார்க் ஆக்ட்டும், இந்தியன் பீனல் கோடும் பொருந்தமாட்டாது, சேலை உடலிலும், கரையிலும் போடப்பட்டிருக்கும் பொம்மை அல்லது சித்திரம் பேட்டன்ட் அண்டு டிசையின் ஆக்ட்டின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்த போதிலும் அது 5 வருஷம்தான் செல்லும். ரிஜிஸ்டர் வலிவுடையதாயிருக்கும்; இந்த 5 வருட காலத்திற்குள்ளாக வேறே யாரேனும் அந்த பொம்மைப் பிளானைத் திருடி சேலையில் அச்சிட்டால் அதேமாதிரியான பொம்மை போடக்கூடாதென்று தடை உத்திரவு பிறப்பிக்க சிவில் கோர்ட்டாருக்கு மட்டிலும் அதிகாரமிருக்கிறதே ஒழிய கிரிமினல் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை என்று பிரதிவாதி தரப்பில் கக்ஷி சொல்லப்பட்டது. கோர்ட்டார் இந்த விதத்தை ஏற்றுக்கொண்டு கிரிமினல் கோர்ட்டு நடவடிக்கையை ரத்து செய்யும்படியாக உத்திரவு செய்தார்கள்.

ஹைகோர்ட்.

(மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸதாசிவய்யர் முன்பாக.)

ஒரு போஸ்டு மாஸ்டரையும், அவர் மனைவியையும் கொலை செய்ததாகக் கேஸ்.

மரண தண்டனை உறுதி செய்யப்பட்டது.

விசாகப்பட்டணம் ஜில்லாவிலுள்ள சுநங்கவரப்புக்கோட்டை என்கிற ஊரிலிருந்த போஸ்ட் மாஸ்டரையும அவர் மனைவியையும் விஸ்கம் வீராஸாமி என்ற தபால் சேவகன் கொலை செய்துவிட்டதாக விசாகப்பட்டணம் ஸெஷன்ஸ் ஜட்ஜால் மரணதண்டனை விதிக்கப்பட்டான், அவன் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டான்.

கேஸின் விருத்தாந்தங்கள் பின்வருமாறு:— கொலை நடந்த சென்ற டிஸம்பர் மாதம் 29-ந் தேதி இரவு எதிரி போஸ்ட் ஆபீஸில் பாராவாகத் தூங்கிக்கொண்டிருந்தான். கொலைகள் செய்யப்பட்ட விஷயம் மறுநாள் காலையில் தெரிய வந்தது. போஸ்ட்டு மாஸ்டருடைய சரீரமும் அவருடைய மனைவியின் சரீரமும் போஸ்டாபீஸில் வெவ்வேறு இடங்களில் கிடந்தன. போஸ்டாபீஸ் ஸொத்துக்களில் ரொக்கமும், நோட்டுகளும் லேபில்களுமாக ரூ. 1943-6-9 குறைந்திருந்தது. போஸ்டு மாஸ்டர் மனைவியின நகைகளில் 477 ரூபாய் பெறுமானமுள்ள சொத்தும் களவுபோயிருந்தது. டிசம்பர் மாதம் 30-ந் தேதி மாலையில் எதிரி அரஸ்ட் செய்யப்பட்டான். எதிரியினுடைய மகளும் மரு

மகளும் சொன்ன சமாசாரத்தின்மேல் போஸ்டு மாஸ்டர் மனைவியின் நகைகள் எல்லாவற்றையும் போலீஸார் கைப்பற்றி விட்டதுடன், போஸ்டாபீஸ் சொத்துகளில் ரூபா 1914-4-0 பெறுமானமுள்ள சொத்துக்களையும் கைப்பற்றி விட்டார்கள். ஆனால் அந்தப் பெண்ணும் மருமகளும் தாங்கள் முதலில் சொன்ன விஷயங்களை ஸெஷன்ஸ் கோர்ட்டில் மறுத்து விட்டார்கள், அஸெஸர்கள் இருவரும் எதிரி குற்றவாளி என்று முடிவு செய்தார்கள். ஜட்ஜூம் அந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு எதிரிக்கு மாண தண்டனை விதித்தார். போஸ்டு மாஸ்டரின் மனைவியிருந்த வீட்டில் கடைசியாகக் காணப்பட்ட மனிதன் எதிரியே. கொலை நடந்த காலத்துக்கு சற்று முன் வரையில் அவன் அங்கிருந்ததற்கு சாட்சியமிருக்கிறது. கொலை செய்யப்பட்ட விதத்திலிருந்து போஸ்ட்மாஸ்டர் குடும்பத்தில் நல்ல பழக்கமுள்ளவன் செய்ததாகத் தெரிகிறது. போஸ்டாபீஸ் சொத்துகளையும், போஸ்ட் மாஸ்டர் மனைவியின் நகைகளையும் திருடியதைக் கொண்டு கொள்ளையடிக்கும் நோக்கத்துடன கொலை செய்தவனே ஒழிய, வேறு துவேஷத்தினால் செய்தவனல்லவென்று தெரிகிறது. கொல்லப்பட்டவர்களுடைய மண்டை ஓடுகள் நொருங்கிப் போயிருந்ததாகவும், அவர்கள் அடிபட்டவுடனே இறந்துபோயிருக்க வேண்டுமென்றும் மெடிகல் ஆபீஸர் சாட்சியம் சொல்லியிருக்கிறார். இத்தியாதி காரணங்களைக் கொண்டு எதிரியே கொலை செய்தவனென்று நிச்சயமாக ஏற்படுகிறதென்று ஸெஷன்ஸ் ஜட்ஜ் அபிப்பிராயப் பட்டார்.

பப்ளிக் பிராஸிகூடருடைய வாதத்தைக் கேட்டு விட்டு, ஜட்ஜ்கள் மாண தண்டனையை உறுதி செய்து அப்பீலைத் தள்ளிவிட்டார்கள்.

பைராகிமடக் கொலைக் கேஸ்.

சென்ற மார்ச்சு மாதம் 15-ந் தேதியன்று கெங்காதர் என்பவன் தன்மனைவி கிருஷ்ணபாய் என்பவளைக் கொல்லவேண்டுமென்ற எண்ணத்துடன் அரிவாளால் தலையிலும் கழுத்திலும் வெட்டிக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு விசாரணைக்குக் கொண்டுவரப்பட்ட இக் கேஸை அடுத்ஸெஷன்ஸுக்கு ஒத்தி வைக்கும்படியாயும் எதிரியை பைத்தியக்காரர் ஆஸ்பத்திரியில் மெடிகல் உத்தியோகஸ்தரின் பார்வையில் விட்டுவைக்கும் படியாயும் மிஸ்டர் ஜே. ஸ். ஆடம் கேட்டுக் கொண்டார். அதற்கு கிரௌன் பிராஸிகூட்டர் ஆக்ஷேபியாமையால் அவ்விதமே செய்யும்படி ஜட்ஜ் உத்தரவளித்தார்.

சீப் பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் கோர்ட், எழும்பூர்.

(மிஸ்டர் F. D. பர்டு முன்பாக)

24-4-14.

மைலாப்பூர் பேர்மனேண்டு பெனிபிட் பண்டு, லிமிடெட்.

மோசம் செய்ததாகக் கேஸ்.

மைலாப்பூர் பெர்மனெண்டு பெனிபிட் பண்டின் பிரஸிடெண்டு போலீஸ்முன் பிராது கொடுத்தன்மேல், ஆறுமுகம் சிவபாதம் என்ற இருவரை போலீஸார் அரஸ்ட் செய்து அவர்கள் நம்பிக்கை மோசம் செய்ததாகக் கேஸ் கொண்டுவந்தார்கள். பண்டு ஐவேஜியில் மோசம் நடத்திருப்பதாக பண்டின் கணக்குகளை மோசம் செய்த ஆடிடர் அறிவித்ததன்மேல் பிராது செய்து கொள்ளப்பட்டது. எதிரிகள் மேல் அனேக குற்றங்கள் சாட்டப் படுகின்றன. ஆறுமுகம் பண்டின் பணத்தை சொந்த உபயோகப் படுத்தினதாகவும், பண்டுக்குச் சொந்தமான ஒரு ஜதை கம்மல்களை டைரெக்டர்களுக்குத் தெரியாமல் அடகு வைத்து விட்டதாகவும் அவன் மேல் ஒரு கேஸ்.

பண்டின் பிரஸிடெண்ட் சாட்சியாக விசாரிக்கப்பட்டார். நகைசீட்டின்மேல் கடன்கொடுப்பது பண்டுக்கு வழக்கம் 1905-மவருஷ மார்ச்சுமாதம 19-ந்தேதியன்று பொன்னுஸாமி ஆசாரி என்றவர் ஒரு ஜதைக் கம்மலை அடகுவைத்து 400 ரூபாய் கடன் வாங்கிக்

கொண்டு போனார். ஹெட் கிளார்க்கு அந்த ஜதை கம்மலை எங்கேயோ அடகுவைத்து இரண்டு மூன்று தினங்களுக்கு முன் தான் மீட்டதாகச் சென்ற மார்ச்சு மாதம் 22-ந் தேதியன்று டைரெக்டர்களுக்குத் தெரிந்தது சிலமோசங்களை ஆடிடர் எடுத்துக் காட்டின தன் மேல் விசேஷ மீட்டிங்கொன்று நடத்தப்பட்டது. அப்பொழுது குமஸ்தாமேல் என்னென்ன சொல்லப்பட்டதோ அந்த விஷயங்களைத் தானும் சொன்னார். அதற்குப் பிறகு பண்டின் பணங்களை வசூல் செய்யும்படி எதிரிக்கு உத்தரவு செய்யப்பட்டது. வரவு குறைந்தது. 83 ரூபாயை தான் சொந்த உபயோகப்படுத்திக் கொண்டதாக எதிரி எழுத்து மூலம் ஒப்புக் கொண்டார். அதன்மேல் போலீஸுக்கு அறிவிக்கப்பட்டது என்று பிரஸிடெண்டு சொன்னார்.

பிறகு பண்டின் ஸெக்ரட்டரியாகிய மிஸ்டர் நாராயணராவ் விசாரிக்கப்பட்டார். அடகு வைத்த பொன்னுசாமி ஆசாரி நகையை மீட்டுக் கொள்ளவில்லையாகையால், அது விற்கப்படுமென்று நோடீஸ் போடப்பட்டது, தான் விற்றுத் தருகிறதாக எதிரி சொல்லவே, நகை எதிரி வசம் கொடுக்கப்பட்டது. நகையையாவது கிரையத் தொகையாவது கொடுக்காமல் எதிரி ஸால்ஜாப் சொல்லி வந்தபடியால், நகையைத் திருப்பிக் கொடுக்கும்படி கட்டாயப் படுத்தப்பட்டது. அதன் மேல் எதிரி நகையைக் கொண்டுவந்து கொடுத்து விட்டார். நகையை ஒரு ஸாவ்காரிடம் அடகு வைத்திருந்ததாகவும், பண்டுக்கு வரவேண்டிய தொகைகளை வசூலித்த தொகையிலிருந்து பணத்தைக் கொடுத்துமீட்டுக் கொண்டு வந்ததாகவும்சிவபாதம்என்ற குமஸ்தா சொன்னார் என்று செக்ரடெரி சாட்சி சொன்னார். அதன் பிறகு ஆடிட்டரும், ஒரு ஸாவ்காரும விசாரிக்கப்பட்டார்கள். பண்டிலிருந்து 500 ரூபாய் கடன்வாங்க எதிரி அடகுவைத்திருந்த ஒரு மூல ஆதாரவை திருடிக்கொண்டு போய்விட்டதாக கேஸும கொண்டு வரப்பட்டிருக்கிறது அதிலும இன்னொரு அநேக சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அடுத்த 30-ந் தேதிக்கு விசாரணை ஒத்திப் போடப்பட்டிருக்கிறது.

இரண்டாவது எதிரியாகிய சிவபாதத்தின் மேல கொண்டு வரப்பட்டிருக்கிற கேஸும 30-ந்தேதிக்கு ஒத்திப் போடப்பட்டிருக்கிறது.

பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் கோர்ட், ஜார்ஜ்டவுன்.

22-4-14.

மோசமும் தப்புக் கையெழுத்தும்.

ஸெஷன்ஸுக்குக் கமிட் செய்யபபட்டார்.

சென்னையிலிருக்கும் சார்ட்டர்ட் பாங்க் அக்கவுண்டண்ட் அறிவித்தன்மேல் பி, II-டிவிஷன் போலீஸார், அந்தபாங்கில் கிளார்காயிருந்த சேஷாசலம் என்ற ஒருவர், சென்ற 20-4-14-ல தப்புக் கையெழுத்திட்டதாகவும் 35-ரூபா செக் ஒன்றைத் திருடிக்கொண்டதாகவும் குற்றம் சாட்டிக் கேஸ் கொண்டு வந்தார்கள்.

சாக்ஷியத்தாலேற்பட்டதென்னவெனில், மெஸர்ஸ் அப்துர் ஹகீம் கம்பெனியில் ஏஜண்டாகிய மிஸ்டர் அருணகிரி நாயுடு எதிரி மேஜையறையில செக் புத்தகத்தை வைத்திருந்தார். எதிரி அதை மெதுவா யெடுத்துக்கொண்டுபோய்க் கள்ளக் கையெழுத்திட்டு மாற்றுவதற்காகக் கொடுத்தார். பிறகு எதிரியை அருணகிரி நாயுடு செக் புஸ்தகம் எங்கே என்று கேட்டார். எதிரி தனக்குத் தெரியாதென்றார். விசாரித்துப் பார்த்ததில, புத்தகத்திலுள்ள கையெழுத்து தப்புக் கையெழுத்தென்று பாங்கில பணம் எண்ணுகிறவர் கண்டு பிடித்தார். மாஜிஸ்டிரேட் முன் எதிரிதான் அக்குற்றம் செய்ததாக ஒப்புக்கொண்டார். மாஜிஸ்ட்ரேட் சாக்ஷியங்களை விசாரித்த பிறகு எதிரியின்பேரில குற்றமேற்படுத்தி அவரை அடுத்த கிரிமினல் ஸெஷன்ஸுக்குக் கமிட் செய்துவிட்டார்.

AGRICULTURE.

விவசாயம்.

The Dairying Industry.

வெண்ணெய் செய்யும் தொழில்.

———:-:———

பூசா விவசாய ஆராய்ச்சி சாலையைச் சேர்ந்த மெசர்ஸ் மில்கன் அட்கிசன் என்கிற இருவர்களும் சேர்ந்து வெண்ணெய் செய்யும் தொழிலைப்பற்றி ஒரு பிரசுரம் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இவர்கள் இருவரும் இந்தியாவில் அனேக விடங்களில சுற்றுப்பிரயாணஞ் செய்து ஆங்காங்குள்ள ஐரோப்பியர் மானேஜ் மெண்டில் நடத்தப்பட்டு வரும் வெண்செய்ச் சாலைகளையும் இந்தியர் மானேஜ்மெண்டில் நடத்தப்பட்டு வரும் வெண்ணெய் சாலைகளையும் பார்வையிட்டுஅது தன் மூலியமாக உண்டான அநுபோகத்தை கொண்டு அந்தப் பிரசுரத்தை வெளிப்படுத்திருக்கிறார்கள். இந்தப் பிரசுரத்தில் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் இந்தியாவில் தற்காலம் வெண்ணெய் செய்யுந் தொழில் அடியோடு கெடுதலாக விருக்கிறதென்று ரிமார்க் செய் திருக்கிறார்கள். இந்தப் பிரகாரம் அடியிற்கண்ட சிபார்சுகளுடன் விவசாய போர்டார் மீட்டிங்கிற்கு அனுப்பப்பட்டிருக்கிறது:—

(1) இந்த தேசத்தில் பால் கொடுக்கக் கூடிய மகா சிலாக்கியமான பிராணிகளை கவர்ன்மெண்டார் சம்பாதித்துக் கொடுக்கவேண்டிய அவசியமான ஏற்பாடுகள் எல்லாம் வெகு சீக்கிரம் செய்யவேண்டும்.

(2) வெளி தேசங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட காளை மாடுகளுடன் நம் தேச பசுக்களைக் கூட்டி நல்ல வகையான மாடுகளை உற்பத்தி செய்வதை விவசாய இலாக்காக்காரர்கள் தங்களுடைய கடமையாகக் கொள்ள வேண்டும்.

(3) வெண்ணெய் செய்யும் தொழிலுக்கு வேண்டிய பொருள்கள் முனிசிபாலிடிகள் மூலியமாகவும் ஐக்கியநாணயச் சங்கங்கள் மூலமாகவும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். இந்திய நிலைமைக்குத் தகுந்தபடி வெண்ணெய் செய்யும் தொழிலை முழுதிலும் ஆராய்ச்சிசெய்து கண்டுபிடிக்கவேண்டும்.